பக்கங்கள்: 12 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 வைகாசி 04 செவ்வாய்க்கிழமை 18.05.2021 கதிர் 194

### இது ரகசியம் அல்ல!

கோட்டாபய அரசின் முகமூடி கிழிக்கின்றது. அதன் உண்மைச் சொரூபத்தை தென்னிலங்கைச் சிங்களமே மெல்ல மெல்ல அறியக் கூடியதாக அது அம்பலமாகி வருகின்றது.

சட்டத்துக்கு விரோதமாகத் தமிழர்கள் கொல்லப் பக்கம்02

# முல்லைத்தீவில் மூன்று பொலிஸ் பிரிவுகள் முள்ளிவாய்க்காலை உள்ளடக்கி முடக்கம்

## நீதிமன்று அனுமதித்தும் அங்கு இன்று நினைவேந்தல் செய்ய முடியாத நிலை

முல்லைத்தீவில் ஆடைத் தொழிற்சாலையில் முந்நூறுக்கும் மேற்பட்ட கொரோனாத் தொற்றாளர்கள் நேற்று அடையாளம் காணப்பட்டமையை அடுத்து முல்லைத்தீவு மாவட்டத்தின் மூன்று பொலிஸ் பிரிவுகள் நேற்றிரவு முதல் மறு அறிவித்தல் வரை தனிமைப்படுத்தப்பட்டுள்ளன என்று இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு மற்றும் முள்ளியவளை ஆகிய பொலிஸ் பிரிவுகளே இவ்வாறு நேற்றிரவு 11 மணி முதல் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார்.

தமிழினஅழிப்புப்படுகொலை நாளான இன்று முள்ளிவாய்க்கால் படுகொலை தினத்தை தொற்றுப் பரவல் தொடர்பான தனிமைப்படுத்தல் மற்றும் சுகாதார விதிகளுக்குக் கட்டுப்பட்டும், பயங்கரவாதத்தை 11

# எங்கள் வீட்டு முற்றங்களை இன்று முள்ளிவாய்க்கால் முற்றங்களாக்குக!

## யாழ்.பல்கலை மாணவர் ஒன்றியம் அறைகூவல்



(ந.லோகதயாளன்)

எமது அன்பார்ந்த தமிழ் மக்களே! கொரோனாவைக் காரணம் காட்டி முள்ளிவாய்க்கால் நினைவு முற்றம் முடக்கப்பட்டிருப்பதால் நாங்கள் எமது வீட்டு முற்றங்களை நினைவு முற்றங்களாக்குவோம். இன்று மாலை 6 மணிக்கு ஆலயங்களில் மணியொலி எழுப்புவோம். எமது வீட்டு முற்றங்களில் நினைவுச் சுடர் ஏற்றுவோம்.

– இவ்வாறு கேட்டுக்கொண்டுள்ளது யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம். 2

# நினைவேந்தலுக்கு 'சூம்' மூலம் ஒன்றிணைய சுமந்திரன் அழைப்பு



(ந.லோகதயாளன்)

இறுதிப் போரில் உயிரிழந்த தமிழ் உறவுகளை நினைவு கூரும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை இன்று அனுஷ்டிக்க 'சூம்' தொழில்நுட்பம் ஊடாக மக்களை ஒன்றிணையுமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் அழைப்பு விடுத்துள்ளார்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தினம் இன்று தரணியெங்கும் அனுஷ்டிக்கப்படவுள்ள நிலையில், கொரோனா வைரஸ் சமூகத் தொற்றைக் கருத்தில்கொண்டு 2

# 2,456 பேருக்கு நேற்று தொற்று

நாட்டில் நேற்றும் 2 ஆயிரத்து 456 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை ஒரு இலட்சத்து 45 ஆயிரத்து 202 ஆக உயர்வடைந்துள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்றிலிருந்து ஒரு இலட்சத்து 19 ஆயிரத்து 629 பேர் 2

# மேலும் 19 பேர் சாவு; கொரோனா காவு 981

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி மேலும் 19 பேர் சாவடைந்துள்ளனர் என்று சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

இதையடுத்து நாட்டில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 981 ஆக உயர்வடைந்துள்ளது என அரச தகவல் திணைக்களம் நேற்றிரவு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நாடு மீண்டும் முடக்கம்!

## மே 21 இரவு முதல் 28 அதிகாலை வரை; 25ஆம் திகதி பகலில் மட்டும் தளர்வு



இலங்கையில் எதிர்வரும் 21ஆம் திகதி முதல் மீண்டும் நாடு தழுவிய முழு நேரப் பயணக் கட்டுப்பாடு விதிக்கப்படும் என்று கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா நேற்று அறிவித்தார்.

முதற்கட்டமாக இம்மாதம் 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரவு 11 மணி முதல் 2

# புதுக்குடியிருப்பு ஆடைத்தொழிற்சாலை ஊழியர்கள் 322 பேருக்குத் தொற்று

## வடக்கில் நேற்று 378 பேருக்குக் கொரோனா

(ந.லோகதயாளன்)

புதுக்குடியிருப்பு ஆடைத் தொழிற்சாலையின் பணியாளர்கள் 322 உட்பட வடக்கு மாகாணத்தில் மேலும் 378 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்றுள்ளமை நேற்று கண்டறியப்பட்டுள்ளது என்று மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது–

யாழ்ப்பாணம் போதனாவைத்தியசாலை, யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவபீட ஆய்வுகூடங்களில் 976 பேரின் மாதிரிகள் நேற்று 11

# வீடுகளில் சிகிச்சையளிக்கும் வழிகாட்டுதல் வார இறுதியில்

வைத்தியசாலைகள் மற்றும் சிகிச்சை நிலையங்களில் இடப்பற்றாக்குறை நிலவுவதால் அறிகுறியற்ற கொரோனா நோயாளர்களை சொந்த வீடுகளில் வைத்துச் சிகிச்சை அளிப்பதற்கான வழிகாட்டுதல்கள் வார இறுதியில் வெளியிடப்படும் என்று இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்துக்கு ஜனாதிபதி வழங்கிய பணிப்புரைக்கு அமைய அந்த வழிகாட்டல் அடங்கிய சுற்றுநிருபம் தயாரிக்கப்பட்டு வருகின்றது எனவும் அவர் குறிப்பிட்டார்.

எனினும், இதன் 2

# யாழ்.பல்கலையைச் சுற்றி இராணுவத்தினர் குவிப்பு

(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகளை யாழ். பல்கலைக்கழகத்தினுள் மாணவர்கள் இன்று ஏற்பாடு செய்வார்கள் எனப் புலனாய்வுத் தகவல்கள் கிடைத்திருக்கின்றன எனக் கூறி, பல்கலைக்கழகத்தைச் சுற்றி படையினர் நேற்று குவிக்கப்பட்டுள்ளனர். இதனால் அந்தப் பகுதியில் பதற்றமான சூழ்நிலை காணப்படுகின்றது.

நாட்டில் எழுந்துள்ள கொரோனாப் பெருந்தொற்று நிலைமைகளை அடுத்து, இம்மாதம் தொடக்கத்தில் இருந்து, நாட்டிலுள்ள சகல பல்கலைக்கழகங்களினதும் கல்வி நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டமையை அடுத்து, யாழ்.பல்கலைக்கழகத்திலும் அத்தியாவசியப் பரீட்சை செயற்பாடுகள், ஆய்வு நடவடிக்கைகள் தவிர மாணவர்கள் 2

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பட்ட போது, கண்டும் காணாததுமாய் இருந்த தென்னிலங்கைச் சிங்களம், தமிழரில் கூர் பார்க்கப்பட்ட அந்தக் கொடூரம் தென்னிலங்கையிலும் பரீட்சித்துப் பார்க்கப்படத் தொடங்கியதும் கெம்பி எழ முயன்றிருக்கின்றது.

போதைப் பொருள் கடத்தல், பாதாள உலகச் செயற்பாடுகளில் சம்பந்தப்பட்டவர்கள் என்ற பெயரில் கைது செய்யப்படும் முக்கிய கிரிமினல் புள்ளிகளை விசாரணையின் பின்னர் போட்டுத் தள்ளும் வேலையை கோட்டா ஆட்சிப்பீடம் மெல்ல மெல்லக் கட்டவிழ்த்ததும் தென்னிலங்கை விழித்துக் கொண்டு விட்டது.

கடந்தவாரத்தில் அடுத்தடுத்த நாள்களில் இரண்டு முக்கிய கைதிகளின் கதை இவ்வாறு முடிக்கப் பட்டது. அதில் ஒரு முக்கியமான சம்பவம் உள்ளடங்கியிருக்கின்றது

*"என்னை தடுப்புக் காவலில் இடம்மாற்றுவது என்ற பெயரில் வெளியே கொண்டு போய், இடைவழியில் வைத்துப் போட்டுத் தள்ளத் திட்டமிட்டிருக்கின்றார்கள், ஆகவே என்னை இடம்மாற்றம் செய்ய வேண்டாம் என உத்தரவிடுங்கள், எனக்குப் பாதுகாப்பு அளியுங்கள்"* – என்று இந்தக் கைதிகள் இருவரில் ஒருவர் உயர்நீதிமன்றத்தில் விண்ணப்பித்திருந்தார். இந்த விடயத்தைக் குறிப்பிட்டு அவர் சார்பில் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப் பட்டிருந்த அடிப்படை உரிமை மீறல் மனுவை உயர் நீதிமன்றம் பரிசீலனைக்கு எடுக்க இருக் கையில், அவரது மனுவில் குறிப்பிட்ட மாதிரியே அவர் தீர்த்துக் கட்டப்பட்டிருக்கின்றார்.

இவ்வாறு பொலிஸ் காவல் மற்றும் சிறை, தடுப்புக் காவலில் இருப்போர் சட்டத்திற்கு முரணான விதத்தில் கொல்லப் படுகின்றமை (Extra Judicial Killings in Police Custody) இப்போது அரசுக்கு எதிரான பெரிய விடயமாகப் பூதாகர உருவெடுத்துள்ளது.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கமே அரசின் இந்த நடவடிக்கைக்கு எதிராகக் கிளர்ந்திருக்கின்றது. இப்படிக் கண்மண் தெரியாமல் தம்மிஷ்டப்படி ஆட்சியாளர்கள் ஆள்களைக் கழுவேற்ற அனுமதிக்க முடியாது எனச் சீறுகின்றனர் சட்டத்தின் ஆட்சியை நிலை நாட்ட விரும்பும் சட்டத்தரணிகள்.

போதைவஸ்து வியாபாரம், பாதாள உலக நடவடிக்கைகளில் மாஸ்டரான வெலசுதா என்பவரும் இப்போது காவலில் உள்ளார். ஆளும் தரப்பின் அடுத்த இலக்கு அவர் என்று பேசப்படுகின்றது. இதற்கிடையில் வெலசுதாவின் தாயார் தம்மகனை இடம்மாற்றுதல் என்ற பெயரில் வெளியே கொண்டு வந்து பரலோகம் அனுப்பப் போகின்றனர், ஆகவே அவரை தற்போதுள்ள பூஸா சிறையில் இருந்து இடமாற்றக் கூடாது என உத்தரவிடக் கோரி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனுச் செய்தார். அந்த மனுவை விசாரணைக்கு ஏற்றுக் கொண்ட நீதிமன்றம், அத்தகைய தடை உத்தரவையும் வழங்கியிருக்கின்றது.

அதுவல்ல விடயம். அந்த வழக்கில் அரசுக்கு எதிராக – வெலசுதாவின் தாயின் சார்பில் – நீதிமன்றத்தில் முன்னிலையாகி வாதிட்டவர் யார் தெரியுமா?

கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாவதற்கு முன்னர், நல்லாட்சி அரசின் கீழ் அவருக்கு எதிராகத் தொடுக்கப்பட்ட வழக்குகளில் அவருக்காக முன்னிலையாகி சட்டப் போராட்டங்களை நடத்திய ஜனாதிபதி சட்டத்தரணி றொமேஷ் டி சில்வாதான்.

இப்போது ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தமது அரசில் புதிய அரசமைப்பு ஒன்றை உருவாக்குவதற்காக நியமித்திருக்கும் நிபுணர் குழுவின் தலைவரும் அவர்தான்.

கொழும்புத் துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டமூலம் தொடர்பில் உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை சபாநாயகர் இன்று நாடாளுமன்றத்தில் அறிவிக்கவிருக்கின்றார். இது தொடர்பான உயர்நீதிமன்ற விசாரணைகளில் ஜனாதிபதியின் செயலாளர் சார்பில் முன்னிலையாகி வாதிட்டவரும் இதே றொமேஷ் டி சில்வாதான்.

அவரே இப்போது சட்டத்துக்குப் புறம்பான படுகொலைகள் – அதுவும் நீதித் துறைக் காவலில் இருப்போர் கொல்லப் படுகின்றமை – கூடு பிடிக்கும் போது, ஆளும் தரப்புக்கு – அரசுக்கு – எதிராகக் களம் இறங்கியிருக்கின்றார். சபாஷ். நல்ல போட்டி!

★ ★ ★

கொழும்புத் துறைமுக நகர சட்டமூலம் மீதான உயர்நீதிமன்றத் தீர்ப்பு இன்று நாடாளுமன்றத்தில் அறிவிக்கப்படும். நாளையும் மறுதினமும் அதன் மீதான விவாதம் நடக்கும். அந்தச் சட்டமூலத்தை காலம் தாழ்த்தாமல் சட்டமாக நிறைவேற்றி முடிக்க அரசு துடியாத் துடிக்கின்றது என்பது தெரிந்ததே.

நாட்டை முழு முடக்கத்தில் வைத்துக் கொண்டு, துறைமுக நகர சட்டமூலத்தை நிறைவேற்றி முடிப்பதற்காக நாடாளுமன்றத்தை மட்டும் கூட்டலாமா என்ற கேள்வி வரும் என அஞ்சுகின்றது அரசு.

அதனால்தான் கடந்த 13ஆம் திகதி தொடங்கி 28ஆம் திகதி வரை நீடிக்கப்பட வேண்டிய பொது முடக்கத்தில் 16ஆம் திகதி முதல் 21ஆம் திகதி வரை – நாடாளுமன்ற விவாதம் நடக்கும் காலத்தில் – கொஞ்சம் தளர்வு என்கின்றன விடய மறிந்த வட்டாரங்கள்.

சோழியன் குடுமி சும்மா ஆடாதலவா?

★ ★ ★

முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை இன்று முள்ளிவாய்க்காலில் நடத்த முடியாத சூழ்நிலை ஏற்பட்டு விட்டது. முல்லைத் தீவில் ஏற்பட்டுள்ள மோசமான கொரோனாப் பரவலினால் முள்ளிவாய்க்கால் உட்பட்ட பிரதேசம் முழுமையாக முடக்கப்பட்டிருப்பதாக அரசு அறிவித்துள்ளது. அதனால் அங்கு நினைவேந்தலை இன்று நடத்துவது சாத்தியமில்லை.

எனினும், நேற்று மாலை இந்த முடக்க அறிவிப்பு – அல்லது பிரதேசத் தனிமைப் படுத்தல் உத்தரவு – வழங்கப்பட முன்னர், அங்கு நினைவேந்தலை நடத்துவது தொடர்பில் நீதிமன்றத்தினால் தடை உத்தரவு விதிக்கப்பட்டிருந்ததாகவும், பின்னர் நேற்றுக் காலை தடை விலக்கப்பட்டதாகவும், வெளியான செய்திகள் தவறானவை. நமது 'காலைக்கதிர்' பத்திரிகையில் கூட தவறான அர்த்தத்தில்தான் அந்தச் செய்தி பிரசுரமாகியிருந்தது.

நினைவேந்தலுக்கு இம்முறை முல்லைத்தீவு நீதிமன்றம் தடை விதிக்கவேயில்லை.

இது தொடர்பாக முல்லைத்தீவு நீதிவான் ரி.சரவணராஜா கடந்த 13ஆம் திகதி விடுத்த தடைக் கட்டளையில் இரண்டே இரண்டு விடயங்கள்தாம் இருந்தன.

ஒன்று – பயங்கரவாதத்தை ஊக்குவிக்கும் வகையில் நினைவேந்தல் நிகழ்வு நடத்தக் கூடாது.

அடுத்தது – தனிமைப் படுத்தல் மற்றும் நோய்த் தடுப்பு விதிகளை மீறும் விதத்தில் அந்த நிகழ்வை முன்னெடுக்கக் கூடாது

இதுவே அந்தக் கட்டளை. நினைவேந்தல் நிகழ்வை நடத்தக் கூடாது என்ற கட்டளை எதையும் நீதிவான் பிறப்பிக்கவில்லை – ஊடகங்களில் ஆரம்பத்தில் தெரிவிக்கப்பட்டமை போன்று.

நேற்றும், நகர்த்தல் பத்திரம் ஒன்றைச் சமர்ப்பித்து இந்த வழக்கை எதிராளிகளின் சட்டத்தரணிகள் முன்னெடுத்த போது நீதிவானே அதைச் சுட்டிக்காட்டினார்.

*"நான் தவறான தடை உத்தரவு எதனையும் வழங்கவில்லையே. பயங்கரவாதத்தை ஊக்குவிக்கும் வகையில் நடத்தாதீர்கள், தனிமைப்படுத்தல் மற்றும் நோய்த் தடுப்பு ஒழுங்கு விதிகளை மீறாதீர்கள் என்றுதானே உத்தரவு வழங்கியுள்ளேன். அவற்றுக்குக் கட்டுப்பட்டு நினைவேந்தல் நிகழ்வு எதனையும் நடத்தலாம். அதற்கும் தடை இல்லையே"* – என்று நீதிவான் சுட்டிக்காட்டினார்.

சட்டத்தரணிகள் அதனை ஏற்றுக் கொண்டனர். ஆனால், நீதிமன்றத்தின் இந்த உத்தரவைப் பொலிஸார் தவறாக அர்த்தப்படுத்தி நினைவேந்தலுக்குத் தடை என்று நடவடிக்கை எடுக்க முயல்கின்றனர் என அவர்கள் சுட்டிக்காட்டினர். அதனால் 13ஆம் திகதி வழங்கிய உத்தரவை தெளிவாக விளக்கும் வகையில் ஒரு விளக்கக் கட்டளையை வழங்குமாறு அவர்கள் கோரினார்.

அதற்கு இசைந்த நீதிவான் அந்த உத்தரவை நேற்று மாலை வழங்குவார் எனக் காலையில் தெரிவித்திருந்தார். அவர் மாலையில் வழங்கிய அந்த உத்தரவின் முழு விவரம் என் கைகளுக்குக் கிடைக்கவில்லை.

ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம். நினைவேந்தலுக்கு முல்லைத்தீவு நீதிமன்றம் தடை விதிக்கவும் இல்லை. அதை விலக்கவும் இல்லை.

நாங்கள் ஊடகத் தரப்பினர்தான் எல்லாவற்றையும் குழப்பியடித்துள்ளோம். இது விடயத்தில் நம்மவர்கள் அனைவர் சார்பிலும் நம் வாசகர்களிடம் மன்னிப்புக் கோருவதுதான் நான் செய்யக் கூடிய சரியான காரியமாக இருக்க முடியும். மன்னியுங்கள் வாசகர்களே...!

– மின்னல் –

## வீடுகளில் சிகிச்சை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மூலம் அனைத்து கொரோனா நோயாளர்களும் வீட்டிலிருந்து சிகிச்சை பெற வேண்டும் என்பது அர்த்தமில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டில் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்புடன் வைத்தியசாலை மற்றும் கொரோனா சிகிச்சை நிலையங்களில் நிலவும் இடப்பற்றாக் குறையை குறைக்கும் நோக்கில் சுகாதார தரப்பினர் அறிகுறியற்ற நோயாளர்களை வீடுகளில் வைத்து சிகிச்சை வழங்குவது தொடர்பில் ஆலோசித்து வருகின்றனர்.

இந்நிலையில், கொரோனாவால் கடுமையாகப் பாதிக்கப்பட்டவர்கள் மருத்துவமனைகளில் சிகிச்சை பெறுவார்கள். குறைவான அறிகுறிகளைக் காண்பிப்பவர்கள் இடைநிலை தனிமைப்படுத்தல் மையங்களில் வைத்து சிகிச்சை அளிக்கப்படுவார்கள்.

அத்தோடு கொரோனாத் தொற்று அறிகுறிகள் அற்ற நோயாளர்கள் வைத்தியர்களின் ஆலோசனையின் கீழ் வீட்டிலேயே இருக்க முடியும்.

எனினும், அறிகுறியற்ற கொரோனா தொற்றாளரை வீட்டில் வைத்து சிகிச்சை அளிப்பதா? இல்லையா? என்ற முடிவை வைத்தியர்களே எடுப்பார்கள்.

வீட்டில் தனிமைப்படுத்துவதற்கான வசதிகள் இல்லாத கொரோனா நோயாளர்களை சிகிச்சை மையங்களுக்கு அனுப்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் – என்றார்.

## நினைவேந்தலுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

'சூம்' இணையத்தினூடாக மக்களை ஒன்றிணையுமாறு அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

கொரோனா வைரஸ் மூன்றாம் அலை மிக மோசமாக நாட்டில் பரவியுள்ள நிலையில், இப்படியான கால கட்டத்திலே மே 18 முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை எவ்வாறு நாம் அனுஷ்டிக்க முடியும் என்பது குறித்துச் சிந்திக்கின்ற போது மக்களை ஒரு இடத்தில் கூடச் செய்வது சமூகப் பொறுப்பற்ற செயலாகவும் மாறிவிடும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆகவே, இம்முறை நினைவேந்தலை தொழில்நுட்ப ரீதியாகக் கையாள்வதே சிறந்ததாகும் எனக் கூறியுள்ள அவர், 'சூம்' தொழில்நுட்பம் மூலமாக அனைவரும் சேர்ந்து அனுஷ்டிக்க முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதற்கமைய இன்று மாலை 6 மணிக்கு வணக்கஸ்தலங்களில் மணி ஒலிக்க விட்ட பின்னர் அமைதிப் பிரார்த்தனையின் பின்னர் மாலை 6.15 இல் இருந்து ஒரு மணித்தியாலம் இணைய வழியாக ஒன்றிணைந்து இந்த நினைவேந்தல் தினத்தை நினைவு கூருவோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## 2, 456 பேருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

குணமடைந்துள்ளனர் எனவும், 24 ஆயிரத்து 611 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் அரச தகவல் திணைக்களம் நேற்றிரவு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## யாழ்.பல்கலையைச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உள்நுழைவு தடுக்கப்பட்டிருந்தது.

ஆயினும், நிர்வாக நடவடிக்கைகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றன.

எனினும், பல்கலைக்கழகத்தினுள் மாணவர்கள் சிலர் இன்று நினைவேந்தல் நிகழ்வைச் செய்வதற்குத் தயாராகியுள்ளனர் என்று எமக்குப் புலனாய்வுத் தகவல் கிடைத்திருப்பதால், பல்கலைக்கழகம் தீவிர கண்காணிப்புக்கு உட்படுத்தப் பட்டுள்ளது எனவும், பல்கலைக்கழகத்தைச் சுற்றி இராணுவத்தினரும் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

தீவிர கண்காணிப்பை மீறிச் செயற்படுவோர் மீது சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் பொலிஸ் மேலும் கூறினர்.

## நாடு மீண்டும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

25ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அதிகாலை 4 மணி வரையில் நாடு பூராகவும் முழு நேரப் பயணக்கட்டுப்பாடு விதிக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இரண்டாம் கட்டமாக, 25 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரவு 11 மணி முதல் 28ஆம் திகதி வெள்ளிக்கிழமை அதிகாலை 4 மணி வரையிலும் முழு நேரப் பயணக் கட்டுப்பாடு விதிக்கப்படும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, இரவு 11 மணி முதல் அதிகாலை 4 மணி வரை அமுலில் உள்ள பயணக் கட்டுப்பாடும், மாகாணங்களுக்கு இடையிலான பயணக் கட்டுப்பாடும் இம்மாதம் 31 ஆம் திகதி வரை தொடர்ந்தும் நடைமுறையில் இருக்கும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## எங்கள் வீட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இன்றைய முள்ளிவாய்க்கால் நினைவேந்தலையொட்டி ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

இன்று மே 18. தமிழினப் படுகொலையின் 12ஆவது ஆண்டு நினைவு நாளாகும். தமிழ் மக்களைக் கொடூரமாக அழித்த தோடல்லாமல் நமது நினைவையும் அடக்கும் ஒரு மோசமான அரசின் ஆட்சியில் இந்த நினைவுகூரலை நாங்கள் எதிர்கொள்கின்றோம்.

எமது பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்டிருந்த முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபியை திட்டமிட்டு அழித்த அரசு எமது மாணவரின் போராட்டத்தின் காரணமாக அதனை மீள அமைக்க வழிவிட்டது.

இப்போது வருடாவருடம் எமது மக்கள் பொங்கும் உணர்வுகளோடு முள்ளிவாய்க்கால் வந்து அழுது ஆறிச்செல்லும் நினைவுச்சுடர் தூபியை அரசு மிலேச்சத்தனமாக அழித்ததோடு நினைவுகளையும் வஞ்சகமாகக் கவர்ந்து சென்றுள்ளது.

மேலும், கொரோனாவைக் காரணம் காட்டி முல்லைத்தீவு பகுதியை முடக்கி நாம் எந்தவிதத்திலும் முள்ளிவாய்க்காலை அணுக முடியாதபடி அரச தரப்பினரும் அதன் படையினரும் தடுத்துள்ளனர்.

இவர்களது இழி செயலுக்கு வரலாறு பதில் சொல்லும். ஆகவே, எமது அன்பார்ந்த தமிழ் மக்களே! இவ்வருடம் முள்ளிவாய்க்கால் நினைவு முற்றம் முடக்கப்பட்டிருப்பதால் நாங்கள் எமது வீட்டு முற்றங்களை நினைவு முற்றங்களாக்குவோம்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் பொதுக்கட்டமைப்பு கேட்டுக்கொண்டபடி இன்று மாலை 6 மணிக்கு ஆலயங்களில் மணியொலி எழுப்புவோம். எமது வீட்டு முற்றங்களில் நினைவுச் சுடர் ஏற்றுவோம். இல்லங்களில் ஒரு வேளை உணவாக முள்ளிவாய்க்கால் கஞ்சியைத் தயாரித்து உண்போம். அந்தவேளையில் எமது எதிர்கால சந்ததியினருக்கு இனப் படுகொலையின் உண்மையை எடுத்து விளக்குவோம். நினைவிடத்தை அழிக்கலாம்; நினைவுகளை அழிக்க முடியாது என்பதை உரத்துச் சொல்வோம் – என்றுள்ளது.

# தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் பிரதிநிதித்துவத்தை தேர்தல் சீர்திருத்தத்தால் குறைக்க இடமளியோம்

## மனோ கணேசன் திட்டவட்டம்



ஒட்டுமொத்த இலங்கைவாழ் தமிழர், முஸ்லிம் சனத்தொகையில், வடக்கு கிழக்குக்கு வெளியே 50 விகித தமிழரும், 65 விகித முஸ்லிம்களும், தென்னிலங்கை மாவட்டங்களில் சிதறி வாழ்கிறார்கள். இன்றைய விகிதாசார தேர்தல் முறைமை அடாத்தாக மாற்றப்பட்டு உத்தேச கலப்பு முறைமை கொண்டுவரப்பட்டால், எமது மக்களின் பிரதிநிதித்துவங்கள் சரிபாதிக்கு மேல் நாடாளுமன்றத்திலும், மாகாணசபைகளிலும் குறைந்து விடும்.

அதேபோல், அம்பாறையில் தமிழரும், மட்டக்களப்பில் முஸ்லிம்களும் வெற்றி பெறுகின்றமைகூட கடினமாகிவிடும். திருகோணமலையிலும், வன்னியிலும் கூட இன்றுள்ள ஒழுங்கு மாறும் என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோகணேசன் கூறியுள்ளார்.

நேற்று (திங்கட்கிழமை) நடைபெற்ற தேர்தல்முறை தெரிவுக்குழுவின் முதற் கூட்டத்தின் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட மனோ கணேசன் மேலும் கூறியவை வருமாறு –

நேற்று (திங்கட்கிழமை) ஆரம்பமான தேர்தல் முறைமை சீர்திருத்த தெரிவுக்குழு கூட்டம் சம்பிரதாய முறைப்படி கூடி கலைந்தது. இனி வரும் காலங்களில் இதன் வீச்சு அதிகரிக்கும். அரசாங்கம் தனது பங்காளிக் கட்சிகள் மத்தியில் முன்வைத்த பிற்போக்கு தேர்தல் முறைமை சீர்திருத்த யோசனைகள் இன்று முன்வைக்கப்படவில்லை. அவை கிடப்பில் போடப்பட்டுள்ளன என்று அரசாங்க உள்ளக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆகவே, அரசாங்க யோசனைகளை நாம் உள்வாங்கி, தனித்தமிழ் தொகுதிகளை, தனி முஸ்லிம் தொகுதிகளை எல்லை மீள் நிர்ணயம் செய்து உருவாக்குவோம் எனக் கூறுகின்றமை ஒரு வெறுங்கனவு. இதற்குத் தென்னிலங்கையில் நுவரேலியா மாவட்டத்துக்கு வெளியே இடமில்லை.

ஒருபோதும், பெரும்பான்மை கட்சிகளும், பெரும்பான்மை அதிகார வர்க்கமும், தனித்தமிழ் தொகுதிகளை நுவரெலியா மாவட்டத்துக்கு வெளியே உருவாக்க உடன்படாது. அடுத்தது, பல அங்கத்தவர் தொகுதிகளையும், நிலத்தொடர்பற்ற தனித்தமிழ் தொகுதிகளையும் புதிதாக உருவாக்க இடமில்லை. உண்மையில் இப்படி தனித்தமிழ், தனி முஸ்லிம் தொகுதிகளை உருவாக்க நில பரப்பும், தமிழ், முஸ்லிம் ஜன அடர்த்தியும் கூட இடமளிக்காது.

அதேபோல், தொகுதி முறையும், பட்டியல் முறையும் கலந்த கலப்பு தேர்தல் முறையின் கீழ், நேரடி தொகுதி முறையில் போட்டியிட்டு வெற்றிப்பெற முடியாவிட்டால், பட்டியலில் இடம்கிடைக்கும் என இவர்கள் கூறுவார்கள். இதுவும் நடக்காத காரியம்.

பெரும்பான்மை கட்சிகள் ஒருபோதும் நேர்மையாக நடக்காது. ஆகவே, பெரும்பான்மை கட்சிகளுடன் கூட்டு சேர்ந்து போட்டியிட்டு, அவர்களுக்கு சிதறி கிடக்கும் தமிழ், முஸ்லிம் வாக்குகளை வாங்கி கொடுத்து விட்டு, பிறகு பட்டியலில் நியமனம் கிடைக்கும் என எதிர்பார்ப்பது இலவுகாத்த கிளியின் கதையாகி விடும்.

வடக்கு கிழக்குக்கு வெளியே ஒன்பது (9) தமிழ் எம்.பிக்களும், இருபத்தைந்து (25) தமிழ் மாகாணசபை உறுப்பினர்களும், ஏழு (7) முஸ்லிம் எம்.பிக்களும், பதினெட்டு (18) முஸ்லிம் மாகாணசபை உறுப்பினர்களும் தெரிவாகின்றார்கள்.

இந்நிலையில் தேர்தல் முறையை மாற்றக் கிளம்பும் அரசுக்கு, அரசின் உள்ளே இருக்கும் தமிழ், முஸ்லிம் கட்சிகளும், 20 ஆம் திருத்தத்துக்காக அரசு பக்கம் தாவிய சிறுபான்மை எம்.பிக்களும் சில கோரிக்கைகளை முன்வைக்க வேண்டும். கேள்விகளை எழுப்ப வேண்டும்.

இன்றைய முறையில், இன்று கடைசியாக மாகாணசபைகளில், நாடாளுமன்றத்தில், இருக்கின்ற தமிழ், முஸ்லிம் பிரதிநிதித்துவங்களைக் குறைந்தபட்ச அளவுகோலாகக் கொண்டு, மாற்று யோசனையைத் தரும்படி பெரும்பான்மை கட்சிகளைக் கூட்டாக எழுத்து மூலம் கோர வேண்டும். பட்டியல் நியமனங்களை ஒருபோதும் கணக்கில் எடுக்க முடியாது என்பதையும் அறிவிக்க வேண்டும்.

தேர்தல் சீர்திருத்தத்தைக் கோருகின்றமை அரசாங்கம்தான். ஆகவே இது தொடர்பான நியாயமான யோசனைகளை முன்வைக்க வேண்டியது அரசாங்கமே ஆகும். ஆகவே இது தொடர்பான பந்தை நாம் அரசாங்க பக்கத்துக்கு அடித்து அனுப்ப வேண்டும்.

மாறாக, நாமே தொகுதி முறைமையை ஏற்றுக்கொண்டு, 60:40 என்றும், 70:30 என்றும் மாற்று யோசனைகளை ஆரம்பத்திலேயே முன் வைக்கின்றமை முறையாகாது. இதுபற்றிய தெளிவும், அனுபவமும் அற்ற ஒருசிலரின் யோசனை முன்மொழிவுகள், நமது இனத்தை நிரந்தர அபாயத்தில் போட்டு விடும்.

அனைவரும் ஏற்றுக்கொள்ளும் நியாயமான முறைமையை முன்வைக்க அரசாங்கத்தால் முடியாவிட்டால், இன்றைய அதே விகிதாசார முறைமையை அடிப்படையாக கொண்டு, சனத்தொகைக்கு ஏற்ப, இன்றைய தேர்தல் மாவட்டங்களை, இரண்டு, மூன்றாகப் பிரிக்கும், 'வலய தேர்தல் முறைமை'யை நாம் மாற்று யோசனையாக முன்வைக்க வேண்டும்.

இது புதிதல்ல. ஏற்கனவே, நமது அரசமைப்பில் 14 ஆம் திருத்தமாகக் கொண்டு வந்து விட்டு நடைமுறைப்படுத்தாமல் விடப்பட்டதாகும். இது எமது அரசியல் இருப்பு தொடர்பான பிரச்சினை. தமிழ், முஸ்லிம் மக்களின் நியாயமான பிரதிநிதித்துவங்களை ஒழிக்க ஒருதலைபட்சமாக பெரும்பான்மை அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமாயின் அது உச்சக்கட்ட பேரினவாதம். ஆகவே, இந்த தேர்தல் முறைமை சீர்திருத்தம் என்ற விடயம் தொடர்பில், தமிழ், முஸ்லிம் கட்சிகள் மத்தியில் ஒருமித்த கருத்து உருவாக வேண்டும்.

பேரினவாதத்துக்கு அடிபணிந்து, எமது இனத்தின் பிரதிநிதித்துவங்களை விட்டுக்கொடுத்து விட்டோம் என்ற எதிர்காலத்தின் பழிச்சொல்லுக்கு நாம் ஆளாகக் கூடாது. அடாவடியான தேர்தல் முறை மாற்றத்துக்கு அரசாங்கம் தயாராகுமானால், அதற்கு எதிராகத் தேசிய, சர்வதேசிய போராட்டங்களை முன்னெடுக்க, நாம் தயாராக வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

# இந்துப் பண்பாட்டு நிதியத்துக்கு பிரதமரால் உறுப்பினர்கள் நியமிப்பு





புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் என்ற ரீதியில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நேற்று (திங்கட்கிழமை) அலரி மாளிகையில் இந்துப் பண்பாட்டு நிதியத்துக்கான உறுப்பினர்களை நியமித்தார்.

இந்து சமய மற்றும் கலாசார நடவடிக்கைகளை ஊக்கப்படுத்தி மேம்படுத்துவதற்காக இலங்கை நாடாளுமன்றத்தின் 1985 ஆம் ஆண்டு 31 ஆம் இலக்க சட்டம் மூலமாக இந்துப் பண்பாட்டு நிதியம் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த நிதியத்தின் புதிய தலைவராக புத்தசாசன, மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில குணவர்தன நியமிக்கப்பட்டதுடன், இந்துப் பண்பாட்டு நிதியம் எட்டு உறுப்பினர்களைக் கொண்டுள்ளது.

புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில குணவர்தன மற்றும் இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் அ.உமாமகேஸ்வரன் மற்றும் உதவிப் பணிப்பாளர் திருமதி கு.ஹேமலோஜினி ஆகியோர் பதவி வழியாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் முன்னாள் புனர்வாழ்வு இராஜாங்க அமைச்சின் செயலாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன், மயூராபதி ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலய அறங்காவலர் சபைத் தலைவர் பெ.சுந்தரலிங்கம், ஜிந்துப்பிட்டி ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி ஆலய அறங்காவலர் சபைச் செயலாளர் ஜி.வீ. சுப்பிரமணியன், தொழிலதிபர்களான தேசமான்ய துரைச்சாமி விக்னேஸ்வரன், ஏ.பி.ஜெயராஜ் ஆகியோர் பிரதமரால் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டனர்.

# மனைவி இறந்த மூன்றாம் நாள் கணவர் கொரோனாவால் சாவு

கொரோனா வைரஸ் (கொவிட் 19) தொற்றுக்குள்ளாகி கணவன் மனைவி இருவரும் இறந்தமை தொடர்பான செய்தி பொகவந்தலாவ சிறிபுர பகுதியில் பதிவாகியுள்ளது. கொவிட் தொற்றால் மனைவி உயிரிழந்த 3 நாள்களுக்குப் பின்னர் அதாவது கடந்த ஞாயிற்றுக் கிழமை இரவு கணவர் உயிரிழந்துள்ளார்.

3 பிள்ளைகளின் தாய் கடந்த 13 ஆம் திகதி பொகவந்தலாவ பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, அன்றைய தினமே உயிரிழந்தார்.

68 வயதான பெண் ஒருவரே இவ்வாறு உயிரிழந்தாஜுர் எனப் பொகவந்தலாவ சுகாதாரப் பரிசோதகர் ஜே. கணேஷ் தெரிவித்தார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை உயிரிழந்த பெண் தொடர்பான பி.சி.ஆர். பரிசோதனை முடிவுகள் வெளியாகியிருந்தன.

அதில் அவருக்கு கொவிட் தொற்று ஏற்பட்டமை உறுதியாகியுள்ளது.

அன்றைய தினம் இரவே தொற்றாளரான 76 வயதான எஸ். வடிவேல் என்ற பெண்ணின் கணவர் உயிரிழந்துள்ளார்.

அவர் தொடர்பிலும் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இருவரின் சடலங்களும் டிக்கோயா ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன.

அந்தக் குடும்பத்தில் உள்ள ஏனைய 6 அங்கத்தவர்களும் தற்போது சுயதனிமைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

# முகத்தில் சிறு காயங்களுடன் கம்பளை நகரில் சடலம் மீட்பு

கம்பளை நகரில் இருந்து நேற்று (திங்கட்கிழமை) காலை ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கம்பளை, உனம்புவ பகுதியில் இருந்து பசளை வாங்குவதற்காக நகரத்துக்கு வந்த 50 வயது மதிக்கத்தக்க நபர் ஒருவரின் சடலமே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது. அவரது முகத்தில் சிறு காயங்களும் காணப்பட்டன.

ஓட்டோவில் இருந்து குறித்த நபர் இறங்கும் காட்சி சி.சி.ரி.வி. கமராவில் பதிவாகியுள்ளது. அந்த இடத்தில் இருந்து சிறிது தொலைவிலேயே இவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அவர் ஏதேனும் நோயால் வீதியில் விழுந்து மரணித்தாரா அல்லது எவ்வாறு உயிரிழந்தார் என்பது இன்னும் தெரியவரவில்லை.

முகத்தில் சிறு காயங்கள் இருந்துள்ளன. எனவே, சடலம் பிரேத பரிசோதனைக்காக கம்பளை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் கம்பளை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

உயிரிழந்தவருக்கு 3 பிள்ளைகள் உள்ளனர். மனைவி தொழில் நிமித்தம் வெளிநாட்டில் உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## இன்று செய்ய வேண்டியவை

**இலங்கைத் தமிழர்களைப் பொறுத்தவரை இன்றைய நாள் மிக முக்கியமான தினம்.**

**ஈழத் தமிழர்களின் தேசிய ஆன்மாவில் ஆற்ற முடியாத பெருங் காயத்தை – வரலாற்றுப் பேரழிவை – ஏற்படுத்திய நாளின் நினைவு தினம் இன்று.**

**தமிழர்களின் வரலாற்றில் பௌத்த, சிங்களப் பேரினவாத அடக்குமுறை மேற்கொண்ட மோசமான கொடூரத்தின் நினைவழியா நாளும் கூட.**

**இந்த நூற்றாண்டில், உலகமே வெட்சித்தலைகுனியும் மனிதப் பேரழிவை சிங்கள தேசம் நடத்தி முடித்துக் கொக்கரித்த தினத்தின் நினைவு நாள் இதுதான்.**

**மனித நாகரிகப் பண்பியல்புகளுக்கே பேரவமானத்தை ஏற்படுத்திய மிருகத்தனமான கொடூரங்களின் ஞாபகார்த்த தினம் இதுவே.**

**தமிழரின் தனித்துவச் சிந்தனைகள், செழுமையான வாழ்க்கை முறைகள், பண்பாட்டுச் சிறப்புகள், வரலற்றுக் கோலங்கள், தாயக இருப்பு, தமிழ்த் தேசிய நிலைப்பாடு, விடுதலைச் செயற்பாடு, தனியான தேசம் என்ற பிரக்ஞை எல்லாவற்றையும் துடைத்தழிக்கும் சிங்களப் பேரினவாதத்தின் நீண்ட நெடுநாள் திட்டம் பல பத்தாண்டுகளாகத் தொடர்ந்து கட்டவிழ்ந்து, உச்சம் பெற்று, அந்தக் கொடூரப் பேரழிவு நடவடிக்கையில் அது வெற்றிக்கொடி நாட்டிய தினத்தின் பன்னிரண்டாம் ஆண்டு நிறைவு நாளே இது.**

**இந்தக் கொடூரப் பேரழிவு அடாவடித்தனத்தில் பேரினவாதிகளினால் பல்லாயிரம் தமிழர்கள் கொன்றொழிக்கப்பட்டனர். பல்லாயிரம் பேர் அங்கவீனமாகினர். பல்லாயிரம் பேர் விதவைகளாக்கப் பட்டனர். மேலும் பல்லாயிரம் பேர் அநாதைகளாகவும் ஏதிலிகளாகவும் அலைந்து அவலப்படும் நிலைமை இன்றும் தொடர்கின்றது. காணாமலாக்கப்பட்ட தமது உறவுகளைத் தேடியும், சிறையில் அரசியல் கைதிகளாக வாழும் தமது உறவுகளின் விடுதலைக்காகவும் துயரோடு தொடர்ந்து போராடும் நிலைக்கு நம் மக்கள் தள்ளப் பட்டனர். தமிழரின் ஒரு தலைமுறையே அழிக்கப்பட்டமையோடு அவர்களது உடைமைகள், வாழ்வாதாரங்கள், அடிப்படைக் கட்டுமானங்கள் எல்லாம் தகர்த்தழிக்கப்பட்டன. தமிழரின் தாயகப் பூமி சிங்களப் படைகளால் ஆக்கிரமிக்கப்பட்டு, நிரந்தரமாகச் சூறையாடி அபகரிக்கப்பட்டது.**

**நிரந்தரமாக நீடிக்கும் இந்த அவலமும், துன்பியலும், வேதனையும் உச்சமாகக் கோலோச்சிய தினத்தின் நினைவை இன்று நாம் அமைதியாகவும், அதேவேளை உணர்வுடனும் அனுஷ்டிக்கிறோம்.**

**இந்த அனுஷ்டிப்புடன் – மறைந்த நம்மவர்களுக்கான அஞ்சலியுடன் – இன்றைய தினம் கடந்து போகலாமா?**

**இது விடயத்தில் தமிழ் சிவில் சமூகம் சார்பில் அதன் இணைப் பேச்சாளர்கள் அருட்தந்தை வி.யோகேஸ்வரன், பொ.ச.சிங்கம் ஆகியோர் சுட்டிக்காட்டியுள்ள அம்சங்கள் கவனிக்கத்தக்கவை.**

**இனப்படுகொலை நினைவை அடுத்த தலைமுறைக்கு ஊடு கடத்துவோம் என்று அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.**

***“முள்ளிவாய்க்காலில் கடந்த பல வருடங்களாக நிறுவப்பட்டிருந்த நினைவுச் சுடர் தாங்கியை இலங்கை அரசாங்கம் சேதமாக்கியுள்ளது. எந்த அரச வக்கிரம் இனப்படுகொலையை எம்மீது கட்டவிழ்த்து விட்டதோ, அதே அரச வக்கிரம் எமது உறவுகளை நினைவு கூர்வதைக் கூட தடை செய்கின்றது. இந்தத் தேசத்தில் கண்ணீர் விடுவதும் விளக்கு கொளுத்துவதும் குற்றமாக்கப்பட்டு பல வருடங்கள் ஆகின்றன. இதுவும் இனப்படுகொலையின் தொடர்ச்சியே.***

***போருக்குப் பிந்திய எமது தேசத்தில் கண்ணீரும் நினைவுமே எமது மிகப் பெரிய அரசியல் ஆயுதங்கள். எமது சுயநிர்ணய உணர்வையும் சுதந்திர தாகத்தையும் அணைய விடாமல் பாதுகாக்க நினைவு முக்கியம். எமது வடுக்களை – துயரை – நாம் சந்ததிகளோடு கடத்துவது எமது கூட்டுணர்வுக்கும் இருப்பிற்கும் முக்கியமானது. நினைவுத் தூபிகளை அழிப்பதென்பது நினைவு கூரலை அழிப்பதாகாது என்பதை இன்றைய தினத்தில் ஒன்றிணைந்து வெளிப்படுத்துவோம்.***

***இந்த நினைவு எம்மைப் பொறுத்த வரையில் பழிவாங்கலோடு சம்பந்தப்பட்டது அல்ல. அது நீதியோடும் பொறுப்புக் கூறலோடும் எமது எதிர்காலத்தோடும் சம்பந்தப்பட்டது.***

***இன்று இந்த நான்கு காரியங்களையும் வீட்டில் இருந்தே செய்வோம்:–***

***1. உங்கள் பிள்ளைகள், சகோதர சகோதரிகள், இளம் பராயத்தவரோடு சில மணிநேரம் செலவளித்து, ஏன் இந்த இனப்படுகொலை எம் மீது கட்டவிழ்த்து விடப்பட்டது, விடப்படுகின்றது என்பது தொடர்பில் உரையாடுங்கள். அரசியல் பேசுங்கள், பேசப் பழக்குங்கள்.***

***2. அனைத்து மின்சார ஒளிப்புகளையும் அணைத்து, இருளேந்தி, ஒரு விளக்கை உங்கள் வீட்டு எல்லையில் / தூணில் இரவு 6 மணிக்கு எரிய விடுங்கள். அதனை ஏன் ஏற்றினீர்கள் என உங்கள் குழந்தைகளுக்குச் சொல்லிக் கொடுங்கள்.***


***3. ஒரு வேளையாவது சாதாரண கஞ்சி செய்து சாப்பிடுங்கள். ஏன் இன்று கஞ்சி குடிக்கிறோம் என்பதனை பிள்ளைகளுக்கு விளங்கப்படுத்துங்கள்.***

***4. உங்கள் நம்பிக்கை எதுவாயினும் உங்கள் பிரார்த்தனையில் உயிர் நீத்த அனைவரினதும் அமைதிக்கான பிரார்த்தனையும் இடம்பெறட்டும்.”***

**– சிவில் சமூகத்தின் இந்தக் கோரிக்கை எல்லோருக்குமானதாகட்டும்!**

# கொவிட் தொற்றின் மூன்றாவது அலை ஈஸ்டர் தாக்குதலுக்குச் சமானமானது

## குமார் குணரட்னம் தெரிவிப்பு



இலங்கையில் கொவிட் மூன்றாவது அலையில் ஈஸ்டர் தாக்குதலுக்கு சமனான சம்பவமே நடந்துள்ளது எனவும், மூன்றாவது அலை ஏற்படலாம் என தகவலை அறிந்து அரசாங்கம் அதனைத் தடுக்க நடவடிக்கை எடுக்கவில்லை எனவும் முன்னிலை சோசலிசக் கட்சியின் தலைவர் குமார் குணரட்னம் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் வைத்து குணரட்னம் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

அண்மைய காலமாக ஏற்பட்ட வேகமான மரண வீதம் அதிகரிப்பு, நோயாளர்கள் அதிகரிப்பு, நோய் வேகமாகப் பரவி வருகின்றமை ஆகியவற்றுக்கு தெளிவாக தற்போதைய அரசாங்கமே பொறுப் புக் கூற வேண்டும்.

இது தெளிவாக மனித இனத்திற்கு எதிரான குற்றம். சரியான வேலைத்திட்டம், சரியான நடவடிக்கைகள் தொடர்பாகச் சம்பந்தப்பட்ட துறையினருடன் கலந்துரையாடவில்லை.

இதற்கு இடையில், தம்மிக்க பாணி, கலசங்களை ஆற்றில் போட்டு, முற்றாக மூட நம்பிக்கைகளின் பின்னால் சென்று அமைச்சர்களும் அதற்கு உந்து சக்தியை வழங்கினர். சுகாதார அமைச்சர் நேரடியாக இதில் தலையிட்டு இருந்தார்.

உண்மையில் இது இரண்டாவது ஈஸ்டர் தாக்குதலைப் போன்றது. தகவல்களை அறிந்தும் தடுக்க நடவடிக்கை எடுக்கவில்லை.

கொவிட் நிதியத்திற்குஎன்ன நடந்தது என்ற வெளிப்படைதன்மை இல்லை. எப்படி நிதியத்திற்கு பணம் கிடைத்தது, அதனைச் செலவிட்ட விதம், செலவிட்டதன் உண்மையான விவரங்கள், உண்மையான கணக்கீடுகளை மக்கள் அறிந்து கொள்ள வேண்டும்.

அரச ஊழியர்களின் ஒரு நாள் சம்பளத்தை பலவந்தமாக அன்பளிப்பாகப் பெற்று இந்த நிதியத்தை ஆரம்பித்தனர் எனவும் குமார் குணரட்னம் குறிப்பிட்டுள்ளார்.

# 15 வயது சிறுமியைக் காணோம் உதவி கோரும் உறவினர்கள்



முள்ளியவளை முதலாம் வட்டாரத்தைச் சேர்ந்த 15 வயது சிறு மி ஒருவர் காணாமற்போயுள்ளார் எனத் தெரியவருகிறது.

கிறிஸ்துராசா மிதுசிகா என்ற சிறுமியையேகடந்த 35 நாள்களாகக் காணவில்லை என முள்ளியவளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பில் முள்ளியவளை பொலிஸாரிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது, சம்பவம் தொடர்பான விசாரணை மேற்கொண்டு முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்றத்துக்குத் தெரியப்படுத்தப் பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில் குறித்த சிறுமி தொடர்பில் விவரம் தெரிந்தவர்கள் 0766758057 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு அறியத் தருமாறு உறவினர்கள் மக்களிடம் கோரியுள்ளனர்.

# மே மாதத்தில் தமிழரின் கண்ணீராய் கவிப்பேரரசுவின் தமிழீழக் காற்றே...!

மே மாதத்தில் தமிழரின் கண்ணீராய் கவிப்பேரரசுவின் தமிழீழக்காற்றே பாடல் வெளிவந்திருக்கிறது.

கவிப்பேரரசு வைரமுத்து எப்போதும் தமிழைத் தன் உயிர் மூச்சாகக் கொண்டு வாழ்பவர்.

எமது மக்களின் உரிமைக்காக அவரின் விரல்கள் எழுத மறந்ததில்லை. அதற்கான ஆதாரங்கள் பல அடுக்கிக் கொண்டே போகலாம்.

இதோ இப்போது ‘நாட்படுதேறல்’ எனும் அவரின் நவீன முயற்சியான தமிழ்த் தேற்றலில் முதல் பதின் மூன்று பாடல்களில் நான்காவது பாடலாக தமிழீழக் காற்றே பாடல் வெளிவந்திருக்கிறது.

தமிழர் போராட்டம் இரத்தத்தாலும், கல்லறைகளாலும் மௌனிக்கப்பட்ட இந்த மே மாதத்தில் புலம்பெயர்ந்த தமிழர்கள், தம் உறவுகளைப் பிரிந்து வாடும் சோகத்தை இலக்கியமாக்கிப் படைத்துள்ள இந்தப் பாடலானது தமிழர் வரலாற்றை, தமிழின் வரலாறு பதிவு செய்த பாடலாக வெளிவந்ததானது நன்றிக்கும், வணக்கத்துக்குரியது.

நாட்படுதேறலில் வாரம் ஒரு பாடல் கலைஞர் தொலைக்காட்சியிலும், யூரியூப்பிலும் வெளிவருகிறது, மூன்றாவதாக வெளிவந்த மேற்குத் தொடர்ச்சிமலை..... பாடலில் கவிப்பேரரசு தாமே தோன்றியதானது, கவியரசு கண்ணதாசனுக்கு ஒரு பரமசிவன் கழுத்திலிருந்து பாம்பு கேட்டது..... எனும் பாடலுக்குரிய தனித்துவத்தைக் கொடுக்கிறது.

தமிழீழக் காற்றே பாடலில் நந்திக்கடல் வரும்போது விம்மாமலும், கதறாமலும் இருக்க இதயமுள்ள எவராலும் முடியாது, கவிப்பேரரசே எங்களின் நன்றிகள் – என்கின்றனர் புலம்பெயர் தமிழர்கள்.

# மாகாண எல்லைகளைக் கடக்க முயன்ற 34 வாகனங்கள் திருப்பி அனுப்பப்பட்டன

மாகாணங்களுக்கு இடையிலான போக்குவரத்து மட்டுப்படுத்தப்பட்டுள்ள நிலையில், கடந்த ஞாயிறுக்கிழமை 34 வாகனங்கள் மாகாண எல்லைகளைக் கடக்க முயன்றதுடன், அவை அனைத்தும் திருப்பி அனுப்பப்பட்டதாக பிரதிப் பொலிஸ்மா அதிபரும், பொலிஸ் ஊடகப் பேச்சாளருமான அஜித் றோஹண கூறினார்.

மாகாண எல்லைகளைக் கடக்க முற்படும் மற்றும் தனிமைப்படுத்தல் சட்டவிதிகளை மீறி செயற்படும் நபர்களுக்காக இதுவரையில் அறிவுறுத்தல்கள் மாத்திரமே வழங்கப்பட்டன.

எனினும் இனிவரும் காலங்களில் அவர்கள் அனைவரும் கைது செய்யப்படுகின்றமையுடன், அவர்களுக்கு எதிராகக் கடுமையான சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் எச்சரிக்கை விடுத்தார்.

மேல் மாகாணத்திலிருந்து வெளியேறும் மற்றும் மேல்மாகாணத்துக்கு பிரவேசிக்கும் வாகனங்கள் தொடர்பில் 14 பகுதிகளில் கண்காணிப்பு நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

அதற்கமைய 1,583 வாகனங்கள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதுடன், அந்த வாகனங்களில் பயணித்த 3,452 பேர் கண்காணிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுள் பெரும்பாலானோர் அத்தியாவசிய சேவையின் நிமித்தமே சென்றுள்ளதுடன், இதன்போது தனிமைப்படுத்தல் சட்ட விதிகளுக்குப் புறம்பாக செயற்பட்ட 213 பேருக்கு பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர் எனவும் அவர் கூறினார்.



# இது மீளெழுச்சிக்கான நாள்!

அருட்தந்தை மா. சத்திவேல்

முள்ளிவாய்க்கால் இன அழிப்பு மனித நாகரிகத்தில் ஏற்படுத்தப்பட்ட இன்னுமொரு வடு என்றே உலக வரலாற்றில் பதியப்படல் வேண்டும். மனிதம் காக்கும், மனித நாகரிகம் காக்கும் சமூக, சமய, அரசியல் அமைப்புகளின் கண்முன்னாலேயே அழிப்பு நிகழ்த்தப்பட்டது மட்டுமல்ல, இவ்வமைப்புகளின் பின்னால் உள்ள கொள்ளை முதலாளித்துவத்தின் தூண்டுதலிலும், வழிநடத்துதலிலுமே அரங்கேற்றப் பட்டது என்பதுவே உண்மை.

இவ்வழிவிற்குக் காரணமானவர்கள் மஹிந்த ராஜபக்ஷவும் அவரது குடும்பமும் மட்டுமல்ல. நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அனைத்துக் கட்சிகளும், அனைத்து சமய அமைப்புகளும், சர்வதேசமுமே பொறுப்பேற்கவேண்டும்.

இலங்கையில் தமிழரின் அரசியல் வரலாற்றை எழுதும்போது முள்ளிவாய்க்காலுக்கு முன், முள்ளிவாய்க்காலுக்குப் பின் என்று எழுதப்படல்வேண்டும்.

சிங்கள, பௌத்த மேலாண்மைவாதம் பெரும்பாலான சிங்கள பௌத்தர்களிடத்தில் மேலோங்கி நிற்பது போல கத்தோலிக்க மற்றும் கிறிஸ்தவ சிங்களவர்களிடத்திலும் சிங்கள ஆதிக்கவாதம் வேரூன்றியுள்ளது. இவர்களின் ஆசியுடனும் வீரியத்துடனான உந்துதலின் மூலமே தரையிலும், கடலிலும், விண்ணிலுமிருந்து பாரிய ஆயுதம் பாவிக்கப்பட்டு ஆயிரக்கணக்கானோர் கொன்றொழிக்கப்பட்டனர்.

இவர்களைத் தவிர இஸ்லாமியர்களும் அவர்கள் சார்ந்த சமய அமைப்புக்களும் அமைதி காத்தன. அரசியல் தலைமைகள் அரசியல் அதிகாரங்களைத் தக்க வைத்துக்கொள்ளவும், பதவி சுகங்களைப் பாதுகாத்துக் கொள்ளவும் மாதாந்தம் அவசரகாலச் சட்டத்திற்கும், பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்கும் கை உயர்த்தி அனுமதியளித்தமையோடு இன அழிப்பிற்கும் ஆதரவளித்தன. அண்மையில் முஸ்லிம்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட வன்முறை தொடர்பில் இடம்பெற்ற கலந்துரையாடலில் ஒரு முஸ்லிம் பிரமுகர், நாங்கள் எப்போதும் சிங்களவர்களோடுதான் இருக்கிறோம். யுத்தத்திற்கு முழுமையாக ஆதரவளித்தோம். ஆனால், எங்களைத் தாக்குகிறார்கள் என்றார். எனவே, இன அழிப்பிற்கு முஸ்லிம் சமூகமும் துணையாக இருந்தது எனும் குற்றச்சாட்டிலிருந்து அவர்கள் விலகியோட முடியாது.

தமிழர் தாயகம், தமிழ்த் தேசியம், அவை பற்றிய அரசியல் உணர்வு, அதற்கான செயற்பாடுகள், விடுதலைச் சிந்தனை எல்லாமே துடைத்தழிக்கப்படல் வேண்டும் எனும் இன மேலாண்மைவாத கருத்தியலோடு ஆயிரக்கணக்கானோரின் உடல், உயிர், உடைமை, தமிழர் நிலவளம் அழிக்கப்பட்டமையோடு, உடல் உறுப்புக்களை இழந்தவர்கள், விதவைகளாக்கப்பட்டவர்கள் என்று இன்றும் ஆயிரக்கணக்கானோர் அவலத்தில் வாழும் நிலைக்குத் தள்ளப்பட்டனர். ஒரு தொகுதி மக்கள் உளரீதியிலும் ஊனமுற்றவர்களாக்கப்பட்டார்கள், அகதிகளாக்கப்பட்டார்கள், அநாதைகளாக்கப்பட்டார்கள். இராணுவத்தால் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலம் சூறையாடப்பட்டது. காணாமலாக்கப்பட்டோர், அரசியல் கைதிகள் என ஒட்டுமொத்தத் தமிழ் சமூகமே அழிவினைச் சந்தித்தது மட்டுமல்ல இதே வேதனை துன்பியலுக்குள் தொடர்ச்சியாக வாழும் நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றமையும் அரசியலில் இருந்து மக்களைத் தூரமாக்கும் அரசியல் செயல்பாடு என்பதோடு தொடரும் இன அழிப்பு என்று கூடக் கூறலாம்.

பாதிக்கப்பட்ட மக்களைத் தமது அன்றாடத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக அலையவிடுவதும், தொடர் வறுமையில் வைத்திருப்பதும், இனவிடுதலை என அலையலையாக திரண்டெழுந்த மக்களை தோல்வியின் மனநிலைக்குள் தள்ளி எழவிடாமல் நீண்ட காலத்திற்கு வைத்திருப்பதும், சொந்த வாழ்க்கையை நொந்து மக்களை விரக்தி நிலையில் நீண்டகாலத்திற்கு வைத்திருப்பதும் இன அழிப்பின்



தொடர்ச்சி எனலாம்.

இந்நிலையில், தமிழர் தாயக விடுதலை எனப் போராடிய தமிழ் சமூகம் இன்று இராணுவம் கையகப்படுத்திய நிலமீட்புப் போராட்டத்தில், காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளின் நீதிக்கான போராட்டத்தில், அரசியல் கைதிகளின் விடுதலைச் செயற்பாடுகளில் பெரும்பான்மையானோர் பார்வையாளர்களாக உள்ளனர். இன்னும் பலர் காட்சிக்காக முகம் காட்டுகின்றனர். இவற்றிற்கு மத்தியில் தமிழர் அரசியலில் இருந்து தூரவிலகிய அரசியல்வாதிகள் மக்களைப் பிழையாக வழிநடத்தவும் ஆரம்பித்துவிட்டனர். ஆட்சியாளர்கள்



இன அழிப்பின் அரசியல் நோக்கம் நிறைவேறுவதை நேரடியாகவே காணத் தொடங்கி விட்டனர்.

தமிழர் தாயகம் காக்க இராணுவத்தோடு போராடியமையோடு, இராணுவமே எம் தாயகத்திலிருந்து வெளியேறு என்று குரல் எழுப்பியவர்களில் ஒரு பிரிவினர் இன்று இராணுவத்தில் சேர்வதும், அவர்களது பண்ணைகளில் வேலை செய்வதும், இராணுவம் நடத்தும் முன் பள்ளிகளில் ஆசிரிய தொழில் பார்ப்பதும், இராணுவத்தின் கைக்கூலிகளாக செயற்படுவதும் தொடரும் இன அழிப்பின் உதாரணங்களாகும்.

முள்ளிவாய்க்காலில் நினைவேந்தல் என்பது வருடமொரு முறை வந்துபோகும் தீபாவளி, தைப் பொங்கல் போன்ற திருநாள்கள் அல்ல. கொத்துக் கொத்தாக கொல்லப்பட்டவர்களை நினைந்து சமூகமாக கூடி அழும் தினமுமல்ல. இந்நாள் தமிழர் தாயகம், தேசியம், சுயநிர்ணய உரிமை என்பவற்றைமையப் படுத்திய அரசியல் தியாக நாள். விழிப்புணர்வு சமூக எழுச்சி நாள், தியாகச் சுடர் எழும் திருநாள்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் என்பது கட்சிகளுக்குச் சொந்தமான நாளல்ல. இது தேசத்துரோகிகள், பயங்கரவாதிகள், புலி ஆதரவினர் எனும் பெயர் குத்தப்பட்டும் தமிழர் அரசியலை தலைமேல் சுமந்து வலிகளோடு அரசியல் செயற்பாட்டில் தம்மை அர்ப்பணித்து நிற்கும் அரசியலாளர்களுக்கு, அதன் வழிநிற்போருக்குச் சொந்தமானது. அழிவின், இழப்புக்களின் வலி சுமந்து வாழ்விற்காகப் போராடும் மக்களுக்குச் சொந்தமானது.

யுத்த முன்னெடுப்புகள் தொடர்கையில், இன அழிப்பு நிகழ்ந்துகொண்டிருக்கையில், அதனை நிகழ்த்திய ஆட்சியாளர்களுக்கு, ஆதரவளித்துக் கொண்டிருந்தவர்களுக்கு, தமது சுகபோக அரசியலுக்காகவிடுதலையைக்காட்டிக்கொடுத்தவர்களுக்கு, தமிழர் அரசியலை விட்டு விலகி ஆட்சியாளர்களின் காலடியில் சுகம் அனுபவித்தவர்களுக்கு இன்று கரிநாள். அத்தோடு, தற்போதும் யுத்தக் குற்றங்கள் நடக்கவில்லை, மனித உரிமைகள் மீறப்படவில்லை, எந்தவொரு இராணுவ சிப்பாயையும் யுத்தக் குற்றங்களுக்காக நிறுத்தப்போவதில்லை, காணாமலாக்கப்பட்டோர் என்று எவரும் இல்லை, அரசியல் கைதிகள் எவரும் இல்லை எனக் கூறும் ஆட்சியாளர்களுக்கு துணைநின்று இணக்க அரசியல் நடத்துபவர்களுக்கு இன்று கரிநாள்.

இந்தியாவின், மேற்குலகின் அரசியலுக்காக தமிழரின் அரசியலை காட்டிக்கொடுப்பவர்கள், வடக்கிற்கு ஒரு முகமும், தெற்கிற்கு இன்னுமொரு முகமும் காட்டி அசிங்க அரசியல் நடத்துபவர்களுக்கு இன்று கரிநாள். சுயநல அரசியலுக்காக, பதவிக்காக தமிழ் மக்களின் அரசியலை சிதைக்கும், பிழையாக வழிநடத்தும் அரசியல் கோமாளிகளுக்கு, குருட்டு வழிகாட்டிகளுக்கு இன்று கரிநாள்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் மற்றும் ஈகைச் சுடர் ஏற்றல் என்பன அழிந்தாலும் அழியமாட்டோம், வீழ்த்தினாலும் விழமாட்டோம், மாற்று வடிவத்தில் மாற்று சக்தியாக எழுச்சியுறுவோம் என்பதன் அடையாளமாகும்.

எமது விடுதலைக்கு இன்னும் நீண்டகாலம் இருப்பதாகவே இன்றைய அரசியல் சூழ்நிலைகள் வெளிப்படுத்துகின்றன. அடுத்த கட்டம் இன்னும் இறுக்கமாகவே அமையப்போகிறது.

கட்சி அரசியலுக்கு அப்பால் மக்கள் சக்தியின் தேவை இன்று உணரப்பட்டுள்ளது.

தமிழ் மக்களின் அரசியல் போராட்டம் என்பது பிழையான தமிழ் அரசியல்வாதிகளுக்கு எதிரானதும், பெரும்பான்மை இனவாத ஆட்சியாளர்களுக்கு எதிரானதும், துரோக அரசியலுக்காக தமிழ் மக்களின் அரசியலை விலைபேசும், காட்டிக்கொடுக்கும் சக்திகளுக்கு எதிரான போராட்டமாகும்.

இப்போராட்டத்தின் பங்காளிகளாக அரசியலாளர்கள், அரசியல் கல்வியியலாளர்கள், புத்திஜீவிகள், அடிமட்ட செயற்பாட்டாளர்கள் என்பவர்களோடு அடிமட்ட மக்களின் பங்களிப்பும் அத்தியாவசியமும் அவசியமுமானதாகும். இதனைக் கட்டியெழுப்பும் சக்தி, வழிநடத்தும் தன்மை, கட்டுக்கோப்பாக ஓரணியில் செயற்படுத்தும் திறன் கொண்ட அமைப்பை உருவாக்குவதே உடனடிச் செயற்பாடாக அமைதல் வேண்டும். அதன் மூலமே பொது எதிரியை சந்திக்க முடியும்.

முள்ளிவாய்க்கால் நிகழ்வு ஒருநாள் நிகழ்வல்ல. இது தமிழ் மக்களின் அரசியல் எழுச்சிப் பயணத்தை அடையாளப்படுத்தும் எழுச்சிநாள். பல்லாயிரக்கணக்கான மக்கள் சமூகத்தின் தியாகத்தின் நினைவு நாள் அல்ல. தியாகத்திற்கு அழைக்கும் தீப நாள்.

நாமே விடியல், நமதே விடியல் என தமிழரின் அரசியல் பாதையில் விழிப்போடு பயணித்திட சுடராகி சுடர் எழுப்பி தலைநிமிர திடசங்கற்பம் கொண்டெழுவோம்.

> **முள்ளிவாய்க்காலில் நினைவேந்தல் என்பது வருடமொரு முறை வந்துபோகும் தீபாவளி, தைப்பொங்கல் போன்ற திருநாள்கள் அல்ல. கொத்துக் கொத்தாக கொல்லப்பட்டவர்களை நினைந்து சமூக மாக கூடி அழும் தினமுமல்ல. இந்நாள் தமிழர் தாயகம், தேசியம், சுயநிர்ணய உரிமை என்பவற்றைமையப் படுத்திய அரசியல் தியாக நாள். விழிப்புணர்வு சமூக எழுச்சி நாள், தியாகச் சுடர் எழும் திருநாள்.**

காலைக்கதிர் Kalaikkathir



# இன அழிப்பும் படுகொலையும்

தம்பு கனகசபை (கனடா)

இனப்படுகொலைக்கும் இன அழிப்புக்கும் உள்ள வேறுபாடுகளையும் அவற்றின் முக்கிய அம்சங்களையும் விளக்கும் நோக்கத்தில் இது எழுதப்படுகின்றது.

சர்வாதிகாரியான ஹிட்லர் இழைத்த யூத மக்களின் இன அழிப்பே ஐக்கிய நாடுகள் 1948 இல் இன அழிப்புச் சட்டம் உருவாக்கக் காரணமாக இருந்தது. இச் சட்டம் **(UN Convention on Preventiun and Punishment of Criome of Genocide 1948)** இன அழிப்புகளில் ஈடுபடும் அல்லது ஈடுபட்ட நாடுகளுக்கு எதிரான நடவடிக்கைகளையும், தடுக்கும் முறைமையையும் தண்டனைகள் பற்றியும் குறிப்பிட்டுள்ளது. இச் சட்டம் இதுவரை 132 நாடுகளால் ஏற்றுக்கொள் ளப்பட்டுள்ளது. இலங்கை இதுவரை இச் சட்டத்தை ஏற்கவில்லை.

ஈழத் தமிழ் மக்களுக்கு 1948 முதல் இலங்கை அரசுகளால் இழைக்கப்பட்ட அநீதிகள், கொலைகள், சித்திரவதைகள், பாலியல் கெடுமைகள், பலாத்காரங்கள், கற்பழிப்புகள், உடல், உளத் தீங்குகள், சட்ட விரோதத் தடுத்து வைப்புகள், தமிழ் மக்களின் நிரந்தர இருப்புக்களையும், வதிவிடங்களையும், வரலாற்றுச் சான்றுகளையும் அகற்றி அழித்து தமிழினத்தை ஒழித்து இல்லாமல் செய்யும் நோக்கத்துடன் புரியப்பட்டவை. இச் செயல்கள் இன அழிப்புக்குள் அடங்குகின்றன. இக்குற்றச்செயல்கள் இனப்படுகொலையை உள்ளடக்கிய இன அழிப்பேயன்றி இனப்படுகொலையல்ல. இனப் படுகொலையென்பது இன அழிப்பின் முக்கிய அங்கமே. இதன் காரணமாகவே மேற்குறிப்பிட்ட ஐக்கிய நாடுகள் சட்டத்தில் முதல் அங்கமாக குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

இச் சட்டத்தின்படி இன அழிப்பு பின்வரும் செயல் களையும் இலக்குகளையும் அவற்றை அடையும் நோக்கத்துடன் இலக்குகளாகக் கொண்டு புரியப்பட் டிருத்தல் வேண்டும்.

இச் சட்டத்தின் பிரிவுகள் பின்வருமாறு:-

இன அழிப்பு பின்வரும் செயல்களில் ஏதாவது ஒன்றுதானும் ஒரு தேசிய அல்லது இன அல்லது சமய அல்லது சமூகக் குழுவினரை முற்றாகவோ அல்லது பகுதியாகவோ அழிக்கும் நோக்கத்துடன் இழைத்திருக்கப்படல் வேண்டும்.

1.மேற்குறிப்பிட்ட ஏதாவது ஒரு குழுவினரை கொலை செய்தல்.

2.மோசமான உடல், உளத் தீங்குகளை அக் குழுவின் அங்கத்தினர்களுக்கு விளைவித்தல்.

3.அக் குழுவினரின் ஒரு பகுதியினரையோ அல்லது முழுக் குழுவினரையும் முற்றாக அழித்து விடக் கூடிய வாழ்வுத் தீங்குகளை அவர்கள் மீது பிரயோகித்தல்.

4.அக் குழுவினருக்குள் பிறப்புகள் நிகழாமல் தடுப்பதற்கான வழிவகைகளைத் திணித்தல்.

5.அக் குழுவினரின் சிறார்களை இன்னொரு பிரதான குழுவிற்கு மாற்றுதல்.

மேற்குறிப்பிட்ட இன அழிப்பிற்கான வரைவிலக்கணத்தை அவதானித்தால் தமிழ் மக்க ளுக்கு இழைக்கப்பட்டது இனப்படுகொலை கள் அடங்கிய இன அழிப்பே என்பதை தெளிவாக அறியலாம். இன அழிப்புக்கு முக்கியமான ஐந்து அம்சங்களில் இனப்படுகொலை முதலாவது முக்கிய அம்சமாக குறிப்பிடப்பட்டுள்ளது. ஈழத் தமிழர்களை பொறுத்தமட்டில் இனப்படுகொலைகளுடன் இன அழிப்புக்கான பின்வரும் குற்றச் செயல்கள் இலங்கை அரசுகளால் 1956 இல் இருந்து புரியப்பட்டிருக்கின்றமை யாவரும் அறிந்ததே.

உதாரணமாக பின்வரும் சிங்கள அரசுகளின் செயல்பாடுகளை குறிப்பிடலாம்.

1.இனப்படுகொலைகள் (1958, 1977, 1981,1983,1987,1995, 2006 - 2009 தொடர்யுத்தம்).

1958 முதல் 156 இனப்படுகொலைகள் தமிழ் பகுதிகளில் இலங்கைப் பாதுகாப்புப் படைகளால் நிகழ்த்தப்பட்டிருக்கின்றன.

உதாரணமாக குமுதினிப் படகுக் கொலைகள் போன்றவை.

2.1948 முதல் தமிழ் பகுதிகளில் நிகழ்த்தப்படும் சிங்களக் குடியேற்றங்கள்.

3. புத்த மய மாக்கல், புத்த விகாரைகள், புத்த சிலைகள் தமிழ் பகுதிகளில் அமைத்தல்.



4.சிங்கள மொழித் திணிப்புக்கள்.

5.அரச சேவைகளில் தமிழர்களுக்குப் பாரபட்சம்.

6.தமிழ் பகுதிக் காணிகளை இராணுவம் கைப்பற்றுதல். அதன் மூலம் தமிழ் மக்களை பலாத்காரமாக இடம்பெயரச் செய்தல்.

7.இளைஞர்கள், யுவதிகள் வலிந்து காணாமல் ஆக்கப்படுதல். அத்துடன் காலவரையறை இன்றி தடுத்து வைத்தல். மேலும் இவர்களுக்கு நீதிமன்ற உதவி மறுத்தல்.

8.கற்பழிப்பு, பாலியல் பலாத்காரங்கள் மற்றும் மனித நேயமற்ற கொடுமைகளை இழைத்தல்.

இவற்றில் இனப்படுகொலைகள் தவிர்ந்த மற்றைய சம்பவங்கள் இன அழிப்பை அடையும் நோக்கத்துடன் புரியப்பட்ட புரியப்படும் கட்டமைப்பு இன அழிப்புச் செயல்கள் **(Structural Genocide)** என அழைக்கப்படுவதோடு இன அழிப்பு வரைவிலக்கணத்தில் உள்ளடங்கும் செயல்களாகும். உதாரணமாக மியன்மார் அரசு றோகிங்கிய முஸ்லிம் இனத்தை நாட்டிலிருந்து முற்றாக விரட்டி வெளியேற்றிமை தற்பொழுது இன அழிப்பு என உலக நாடுகளால் ஏற்றுக் கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

> "தற்பொழுது தமிழ் மக்களின் பூர்வீக வாழ்வை உறுதிப்படுத்தும் அடையாளங்கள், வரலாற்றுச் சான்றுகள், வரலாற்று மையங்கள், கட்ட டங்கள், சிதைவுகள் போன்றவற்றை அழித்தும், மறைத்தும், திரிவுபடுத்தும் முயற்சிகளில் அரசாங்கத்தின் தொல் பொருள் திணைக்களம் திட்டமிட்டு ஈடுபட்டு வருகின்றமை இன அழிப்பை பூரணமாக நிறைவேற்றும் நடவடிக்கையாகவே கருத முடியும்."

இவற்றுக்கு மேலாக தற்பொழுது தமிழ் மக்களின் பூர்வீக வாழ்வை உறுதிப்படுத்தும் அடையாளங்கள், வரலாற்றுச் சான்றுகள், வரலாற்று மையங்கள், கட்டடங்கள், சிதைவுகள் போன்றவற்றை அழித்தும், மறைத்தும், திரிவுபடுத்தும் முயற்சிகளில் அரசாங்கத்தின் தொல்பொருள் திணைக்களம் திட்டமிட்டு ஈடுபட்டு வருகின்றமை இன அழிப்பை பூரணமாக நிறைவேற்றும் நடவடிக்கையாகவே கருத முடியும். மேலும் கீரிமலை, திருகோணமலை, திருக்கேதீஸ்வரம், மட்டக்களப்பு, முல்லைத்தீவுப் பகுதிகளில் மேற்கொள்ளப்படும் தமிழர் இருப்பு சான்றுகளையும் அடையாளங்களையும் அழிக்கும் முற்சிகள் கட்டமைப்பு இன அழிப்பாகக் கொள்ள முடியும். உதாரணமாக அண்மையில் குருந் தூர் என்னும் வடக்கு தமிழ் கிராமத் தில் அரசு ஆதரவுடன் பௌத்த குரு மார் மற்றும் அரசியல்வாதிகளுடன் இராணுவப் பாதுகாப்போடு நிறுவப் பட்ட புத்தர் சிலையும், புத்த விகாரை அமைக்கும் பணிகளையும் இங்கு குறிப்பிடலாம்.



முடிவாக ஊடகங்களும், ஊடகவியலாளர்களும், மனித உரிமை ஆர்வலர்களும், சிங்கள அரசுகளால் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட, இழைக்கப்படுகின்ற அநீதிகளையும் வன்முறைகளையும் தெரிவுகளையும் இன அழிப்பு எனப் பொருள்படுத்தி குறிப்பிடுவதோடு இனப் படுகொலை இன அழிப்பின் ஒரு முக்கிய அங்கமே என வேறுபடுத்துவது பயனுள்ளதாக அமையும். இறுதியாக 2009 மேயில் முள்ளிவாய்க்காலில் நிகழ்த்தப்பட்ட 70, 000 இற்கு மேற்பட்ட அப்பாவி மக்களின் கொடூர இனப்படுகொலைகள் இன அழிப்பின் உச்சமான சம்பவமாகவும் அதனை உறுதிப்படுத்தும் கொடூரச் செயலாகவும் சந்தேகமின்றி ஏற்றுக்கொள்ள முடியும்.

இத்துடன் அரசின் திட்டத்துடன் யாழ்ப்பாணம் பொலிஸாரினால் எரியூட்டப்பட்ட தென் கிழக்காசியாவின் மிகப் பெரிய யாழ்ப்பாணம் பொது நூலகம் சிங்கள அரசினால் நிகழ்த்தப்பட்ட கலாசார இன அழிப்பு எனக் கொள்ள வேண்டும்.

(கட்டுரையாளர் தம்பு கனகசபை கனடா, ஒஷாவாவில் வசிப்பவர். சட்டத்துறைப் பட்டதாரியான அவர் முன்னர் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் சட்டத் துறை விரிவுரையாளராகப் பணியாற்றியவர்.)

# சிறையில் உள்ள வெலே சுதாவை இடமாற்றம் செய்ய வேண்டாம்

## நீதிமன்றம் உத்தரவு

பூசா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கம்பளை விதானாலாகே சம்பத் குமார எனப்படும் வெலே சுதாவை அங்கிருந்து வெளியில் அழைத்து வர வேண்டாம் என மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பூசா சிறைச்சாலைகள் ஆணையாளருக்கு நேற்று (திங்கட்கிழமை) இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய அவரை இந்த மாதம் 24 ஆம் திகதி வரை வெளியில் அழைத்துச் செல்ல வேண்டாம் என உத்தரவிடப்பட்டுள்ளது.

வெலே சுதாவின் தாய் ஆர்.பி. மாலனி என்பவர் தாக்கல் செய்த ரிட் மனு மீதான விசாரணை மேன்முறையீட்டு நீதிமன்ற தவிசாளர் நீதிபதி அர்ஜுன ஒபேசேகர மற்றும் பிரியந்த பெர்னாண்டோ ஆகியோர் தலைமையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போதே மேற்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

அதேபோல் இவ்வாறு விதிக்கப்பட்ட இடைக்கால தடை உத்தரவு தொடர்பில் ஆட்சேபனைகளை தெரிவிக்க பிரதிவாதிகளுக்கு நோட்டிஸ் அனுப்ப நடவடிக்கை எடுக்குமாறு மனுதாரர்களுக்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதன்படி பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ள சிறைச்சாலைகள் ஆணையாளர், பூசா சிறைச்சாலையின் அத்தியட்சகர், பொலிஸ்மா அதிபர் மற்றும் சட்டமா அதிபருக்கு அறிவித்தல் கடிதத்தை அனுப்புமாறு மனுதாரர்களுக்கு நீதிபதி உத்தரவிட்டுள்ளார். மேலும் வழக்கை எதிர்வரும் 24 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை நினைவை அடுத்த தலைமுறைக்குக் கொண்டுசெல்வோம்

## தமிழ் சிவில் சமூக அமைப்பு கோரிக்கை

12 மே 2021 அன்று முள்ளிவாய்க்காலில் கடந்த பல வருடங்களாக நிறுவப்பட்டிருந்த நினைவுச் சுடர் தாங்கியை இலங்கை அரசாங்கம் சேதமாக்கியுள்ளது. எந்த அரச வக்கிரம் இனப்படுகொலையை எம்மீது கட்டவிழ்த்து விட்டதோ அதே அரச வக்கிரம் எமது உறவுகளை நினைவு கூறுகின்றமையைத் தடை செய்கின்றது. இந்த தேசத்தில் கண்ணீர் விடுவதும் விளக்குக் கொளுத்துவதும் குற்றமாக்கப்பட்டு பல வருடங்கள் ஆகின்றன. இதுவும் இனப்படுகொலையின் தொடர்ச்சியே.

- இவ்வாறு தெரிவித்துள்ளது தமிழ் சிவில் சமூக அமைப்பு.

அந்த அமைப்பின் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு -

போருக்குப் பிந்திய எமது தேசத்தில் கண்ணீரும் நினைவுமே எமது மிகப் பெரிய அரசியல் ஆயுதங்கள். எமது சுயநிர்ணய உணர்வையும் சுதந்திர தாகத்தையும் அணைய விடாமல் பாதுகாக்க நினைவு முக்கியம். எமது வடுக்களை - துயரை - நாம் சந்ததிகளோடு கடத்துவது எமது கூட்டுணர்வுக்கும் இருப்பிற்கும் முக்கியமானது. நினைவுத் தூபிகளை அழிப்பதென்பது நினைவு கூரலை அழிப்பதாகாது என்பதை எதிர்வரும் மே 18 அன்று ஒன்றிணைந்து வெளிப்படுத்துவோம்.

இந்த நினைவு எம்மைப் பொறுத்த வரையில் பழிவாங்கலோடு சம்பந்தப்பட்டது அல்ல. அது நீதியோடும் பொறுப்புக்கூறலுக்கும் எமது எதிர்காலத் தோடும் சம்பந்தப்பட்டது.

மே 18 அன்று பின்வரும் நான்கு காரியங்களை வீட்டில் இருந்து செய்யுங்கள் என நாம் கோருகின்றோம்:-

1. உங்கள் பிள்ளைகள், சகோதர சகோதரிகள், இளம் பராயத்தவரோடு சில மணி நேரம் செலவழித்து ஏன் இந்த இனப்படுகொலை எம்மீது கட்டவிழ்த்து விடப்பட்டது, விடப்படுகின்றது என்பது தொடர்பில் உரையாடுங்கள், அரசியல் பேசுங்கள், பேசப் பழக்குங்கள்.

2. அனைத்து மின்சார ஒளிப்புகளையும் அணைத்து, இருளேந்தி, ஒரு விளக்கை உங்கள் வீட்டு எல்லையில் ஃ தூணில் இரவு 6 மணிக்கு எரிய விடுங்கள். அதனை ஏன் ஏற்றினீர்கள் என உங்கள் குழந்தைகளுக்கு சொல்லிக் கொடுங்கள்.

3. ஒரு வேளையாவது சாதாரண கஞ்சி செய்து சாப்பிடுங்கள். ஏன் இன்று கஞ்சி குடிக்கிறோம் என்பதைப் பிள்ளைகளுக்கு விளங்கப்படுத்துங்கள்.

4. உங்கள் நம்பிக்கை எதுவாயினும் உங்கள் பிரார்த்தனையில் உயிர் நீத்த அனைவரினதும் அமைதிக்காக பிரார்த்தனை செய்யுங்கள்.

# போகம்பரை சிறைச்சாலை கைதிகள் கூரை மீது ஏறி எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்



போகம்பரை சிறைச்சாலைக் கைதிகள் சிலர், கூரை மீது ஏறி எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றில் ஈடுபட்டு வருகின்றனர்.

தமக்கு விரைவாக பி.சி.ஆர். பரிசோதனை செய்ய வேண்டும் மற்றும் உடனடியாக பிணை வழங்க வேண்டும் எனக் கோரியே இந்தஎதிர்ப்புஆர்ப்பாட்டத்தை இவர்கள் ஆரம்பித்துள்ளனர்.

சுமார் 40 கைதிகள் இவ்வாறு கூரை மீது ஏறி எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

# வவுனியா கல்மடு பகுதியில் வாள்வெட்டு: பொலிஸாருடன் திலீபன் எம்.பி. களத்தில்





வவுனியா, மே 18

வவுனியா, கல்மடுப் பகுதியில் வாள் வெட்டுச்சம்பவம் இடம்பெற்றதாக தெரிவித்ததையடுத்து பொலிஸார் மற்றும் இராணுவத்தினரை அழைத்துக் கொண்டு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், வவுனியா மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான கு.திலீபன் களம் இறங்கிய சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

வவுனியா, கல்மடுப் பகுதியில் சட்டவிரோதமாக கசிப்பு காய்ச்சப்படுவதாக கிடைத்த தகவலையடுத்து அக் கிராம மக்கள் சிலர் கசிப்புகாய்ச்சிய இடத்தைமுற்றுகையிட்டனர். இதன்போது அங்கு நின்றவர்கள் மேற்கொண்ட வாள்வெட்டுத் தாக்குதலில் ஒருவர் காயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரும், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கு.திலீபனின் கவனத்திற்கு இரவு கொண்டு வரப்பட்டதையடுத்து உடனடியாகவே பொலிஸார் மற்றும் இராணுவத்தினரை அழைத்துக் கொண்டு நாடாளுமன்ற உறுப்பினர் சம்பவ இடத்திற்கு சென்று நிலைமைகளை அவதானித்து குழப்ப நிலையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தார்.

அத்துடன், காலையில் கசிப்பு காய்ச்சிய இடம் முற்றுகையிடப்பட்டது. இதன்போது கசிப்பு காய்ச்சும் 4 பெரல்கள், இரண்டு கான்கள் என்பன மீட்கப்பட்டமையுடன், சம்பவம் தொடர்பில் ஈச்சங்குளம் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (100)

# ரயில்வே தொழிற்சங்க பணி புறக்கணிப்பு மேலதிக பஸ்கள் சேவையில் ஈடுபட்டுள்ளன

கொழும்பு, மே 18

போக்குவரத்தை எளிதாக்க கூடுதல் பஸ்களை சேவையில் இணைத்துள்ளதாக பயணிகள் போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

ரயில்வே தொழிற்சங்கங்களின் திடீர் பணிப்புறக்கணிப்பையடுத்து, இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் அறிவித்தார்.

தங்களுக்குக் கொரோனாத் தடுப்பூசிகள் வழங்கப்படவில்லை எனத் தெரிவித்து ரயில் ஓட்டுநர்கள் மற்றும் கட்டுப்பாட்டாளர்கள் சங்கங்கள் நேற்று திங்கட்கிழமை காலை முதல் திடீரென நாடு தழுவிய பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளன.

இதன் விளைவாக, ரயில் சேவைகள் திடீரென நிறுத்தப்பட்டன எனவும் பயணிகள் சிரமத்திற்கு ஆளாகாமல் இருப்பதை உறுதி செய்வதற்காகவே மேலதிக பஸ்களை சேவையில் இணைத்ததாக இராஜாங்க அமைச்சர் கூறினார்.

இவ்வாறு திடீரென பணிப்புறக்கணிப்பில் ஈடுபடுகின்றமை துரதிர்ஷ்டவசமானது என்றும் பொதுமக்கள் கடுமையான கஷ்டங்களை எதிர்கொள்ளும் நிலையில், அவர்களின் கோரிக்கைகளுக்கு செல்ல இது சரியான நேரம் அல்ல என்றும் அமுனுகம கூறினார்.

எனவே, நேற்றுக் காலை முதல் மக்களுக்கு போக்குவரத்து வசதிகளை வழங்குவதற்காக அதிக பஸ்களை இயக்குமாறு இலங்கை போக்குவரத்து சபைக்கு அறிவுறுத்தினேன் என அவர் மேலும் கூறினார்.

# தனிமைப்படுத்தப்பட்ட வீட்டில் இருந்து வெளியேறிய இருவருக்கு எதிராக வவுனியாவில் வழக்குத் தாக்கல்

வவுனியா, சாந்தசோலைப் பகுதியில் உள்ள தனிமைப்படுத்தப்பட்ட வீட்டில் இருந்து வெளியேறிய இருவருக்கு எதிராக பொலிஸாரால் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வவுனியா, சாந்தசோலை பகுதியைச் சேர்ந்த ஒருவருக்கு கடந்த சனிக்கிழமை கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டது. இதனையடுத்து அவருடன் நேரடித் தொடர்பில் இருந்த குடும்பங்கள் தனிமைப்படுத்தப்பட்டன.

இதன்போது தொற்றுக்குள்ளான நபருடன் உணவு விருந்துபசாரத்தில் கலந்து கொண்டனர் என்று சாந்தசோலைப் பகுதியில் உள்ள குடும்பம் ஒன்றும் தனிமைப்படுத்தப்பட்டிருந்தது. இந்நிலையில் குறித்த குடும்பத்தைச் சேர்ந்த இருவர் தனிமைப்படுத்தல் விதிமுறைகளை மீறி அந்த வீட்டில் இருந்து வெளியில் நடமாடியுள்ளனர்.

அந்தக் குடும்பத்தைச் சேர்ந்த பெண் ஒருவர் இன்று (திங்கட்கிழமை) காலை வவுனியா நகரப்பகுதிக்கும், ஆண் ஒருவர் தனது விவசாய நிலப்பகுதிக்கும் சென்றுள்ளனர். இதனை அவதானித்த சிலர் வவுனியா பொதுச் சுகாதார பரிசோதகர்களுக்கு தெரியப்படுத்தியிருந்தனர்.

சம்பவ இடத்திற்குச்சென்ற சுகாதாரப் பரிசோதகர்கள் வீட்டை விட்டு வெளியேறிச் சென்ற இருவரையும் மீள வீட்டுக்கு வரவழைத்தவுடன், கொவிட் தொற்று வேகமாக பரவி வரும் நிலையில் தனிமைப்படுத்தல் விதிமுறைகளை பின்பற்ற வேண்டிய அவசியம் தொடர்பில் தெளிவுபடுத்தியதுடன், சம்பவம் தொடர்பில் பொலிஸாருக்குத் தெரியப்படுத்தினர். சம்பவ இடத்திற்கு வருகை தந்த பொலிஸார் இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டனர்.

இதன்போது சுகாதாரப் பரிசோதகர்களின் அறிவுறுத்தலின் அடிப்படையில் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறியமை தொடர்பில் குறித்த இருவருக்கும் எதிராக பொலிஸாரால் வழக்குத் தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (100)



# முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தில் சிவாஜிலிங்கம் சுடரேற்றி அஞ்சலித்தார்

(விஜயரத்தினம் சரவணன்)

முல்லைத்தீவு, மே 18

தமிழ் இனப்படுகொலை வாரத்தின் ஆறாம் நாளான நேற்று திங்கட்கிழமை முல்லைத்தீவு முள்ளிவாய்க்கால் பகுதியில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் வட மாகாண சபை உறுப்பினருமான எம். கே. சிவாஜிலிங்கம் சுடரேற்றி அஞ்சலி செலுத்தியுள்ளார்.

இறுதி யுத்தத்தில் உயிரிழந்த உறவுகளை நினைவு கூரும் முகமாக ஒவ்வொரு வருடமும் மே மாதம் 12ஆம் திகதி முதல் 18ஆம் திகதி வரை தமிழ் இனப்படுகொலை வாரம் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது. அந்த வகையிலே இந்த வருடம் பல்வேறு தடைகளுக்கு மத்தியிலும் இந்த நினைவேந்தல் நிகழ்வுகள் நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா அச்சுறுத்தலுக்கு மத்தியிலும் மிக எளிமையான முறையில் இடம்பெற்று வருகின்றன.






அந்த வகையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வளாகத்தில் சுடர் ஏற்றுவதற்கு பலருக்கு தடை உத்தரவுகள் பெறப்பட்டு இருக்கின்ற நிலைமையிலும் நேற்று இனப்படுகொலை வாரத்தின் ஆறாவது நாளில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினருமாகிய எம்.கே. சிவாஜிலிங்கம் முள்ளிவாய்க்காலில் நினைவுத் தூபியில் சென்று சுடரேற்றி அஞ்சலி செலுத்தியுள்ளார்.



## லக்சல மற்றும் சலுசல நிறுவன தலைவர் பிரதீப் காலமாகினார்

*லக்சல மற்றும் சலுசல நிறுவனங்களின் தலைவர் பிரதீப் குணவர்தன காலமானார்.*

*இவர் வேரஹேர கே.டி.யூ. வைத்தியசாலையில் கொரோனா வைரஸ் (கொவிட் 19) தொற்று காரணமாக சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே காலமானார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.*

## பொருளாதார ரீதியிலான அபிவிருத்தி சகல மட்டங்களுக்கும் பரவவேண்டும்

பொருளாதார ரீதியான எமது மக்களின் அபிவிருத்தி என்பது சகல பிரதேசங்களுக்கும் அனைவருக்கும் ஆறுபோல் பரவ வேண்டும் என்பதே எதிர்பார்ப்பு என்று கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

கரணவாய் மண்டான் நீர் ஏரியில் நேற்று (திங்கட்கிழமை) இறால் அறுவடையை சம்பிரதாயப் பூர்வமாக ஆரம்பித்து வைத்த பின்னர் கருத்துத் தெரிவிக்கையிலேயே இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் –

பொருளாதாரத்தில் எமது மக்கள் அபிவிருத்தியடைந்து வருவது இங்கு மட்டுமல்ல இந்த நாட்டில் வாழும் சகல மக்களினதும் வாழ்விடங்கள் தோறும் ஆறுபோல் பாய்ந்து பரவ வேண்டும் என்பதுடன் மக்களின் வாழ்வும் வளமும் எழுச்சியும் பெறவேண்டும் என்றே நான் விரும்புகின்றேன்.

மேன்மைதங்கிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின், 'நாட்டைக் கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கு' எனும் கொள்கை வழி அடிப்படையில் எமது கடற்றொழில் அமைச்சினது செயற்திட்டங்களை நாம் முழுமையாக முன்னெடுத்து வரும் இந்தக் காலகட்டத்தில், உலகமயத் தொற்று அனர்த்தமான கொவிட் - 19 அலை எமது நாட்டு மக்களையும் பாதித்து வருகின்றது,

அதற்காக நாம் முடங்கியிருக்க முடியாது அந்த வகையில் எமது மக்களின் சமூக முன்னேற்றத்துக்காக எமக்கு கிடைக்கின்ற வாய்ப்புகளை சரியாக பயன்படுத்தி எமது தாயகப் பிரதேசத்திலிருக்கும் வளங்களை அடையாளங்கண்டு, சுய பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பியும் எமது மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தவேண்டும்.

நாளைய எதிர்காலத்தில் எமது இளைய சந்ததியினர் இந்த மண்ணில் தலைநிமிர்ந்து வாழும் ஒரு சூழலை உருவாக்க வேண்டும் என்பதுடன் அந்த வாழ்வியலை அமைத்து கொடுக்க வேண்டிய பாரிய கடப்பாடும் இந்த வரலாற்றுப் பாதை என்மீது சுமத்தியுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.



கடந்த பெப்ரவரி மாதம் 3 ஆம் திகதி கடற்றொழில் அமைச்சரினால் மண்டான் பிரதேசத்தில் இறால் குஞ்சுகள் விடப்பட்ட நிலையில், அவை தற்போது அறுவடைக்கு தயாராகியுள்ளன.

இந்நிலையில், அவற்றின் அறுவடை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தவால் நேற்று, கொரோனா தொடர்பான சுகாதார நடைமுறைகளுடன் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதன்மூலம்,குறித்த நீர்நிலையை வாழ்வாதாரமாக நம்பி வாழும் சுமார் 200 குடும்பங்களைச் சேர்ந்த மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்வதற்கு ஒரு வரப்பிரசாதமாக அமையப்பெற்றுள்ளது என்பது இங்கே குறிப்பிடத்தக்கதாகும்.

## பொத்துவிலில் ஆணின் சடலம்; இருவர் கைது



பொத்துவில் - செல்வவெளி வயல்பகுதியில் ஆணொருவரின் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளதுடன் சம்பவம் தொடர்பாக இருவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலி ஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் பொத்துவில் 15 களப்புகட்டு விச்சுநகரைச் சோந்த 3 பிள்ளைகளின் தந்தையான 35 வயதுடைய கயாத்து லெப்பை முகமது என்பரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இந்நிலையில் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

கடந்த ஞாயிற்றுக்கிழமை அதிகாலை குறித்த நபர், உடும்பங்குளம் - வெல்வவெளி வயல்பகுதிக்குச் சென்ற நிலையில் உடலில் காயங்களுடன் சடலமாக கண்டெடுக்கப்பட்டுள்ளார்.

மேலும் சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில், களப்புகட்டு பிரதேசத்தைச் சேர்ந்த இருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அத்துடன் சம்பவத்தில் உயிரிழந்தவரின் சடலம், பிரேத பரிசோதனைக்காக பொத்துவில் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## தனிமைப்படுத்தல் மீறிய 262 பேர் கைதாகினர்

சுகாதார அமைச்சால் பிறப்பிக்கப்பட்டுள்ள தனிமைப் படுத்தல் உத்தரவுகளை மீறிய குற்றச்சாட்டுக்காக நேற்று (திங்கட்கிழமை) மேலும் 262 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மேல் மற்றும் தென் மாகாணங்களிலேயே அதிகளவான கைது நடவடிக்கைகள் இடம்பெற்றுள்ளதுடன், இதன்போது 15 வாகனங்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன எனப் பொலிஸார் கூறினர்.

குறித்த குற்றச்சாட்டுக்காக கடந்த ஒக்ரோபர் 30 முதல் இதுவரையான காலப் பகுதியில் 9 ஆயிரத்து 850 நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பிரதிப் பொலிஸ்மா அதிபரும், பொலிஸ் ஊடகப் பேச்சாளருமான அஜித் றோஹண தெரிவித்தார்.

இதேவேளை இன்று முதல் தனிமைப்படுத்தப்பட்ட விதிமுறைகளை மீறும் நபர்கள் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் அவர் எச்சரித்தார்.

## தினம் ஒரு விவசாயத் தகவல்

### மா பயிர்ச் செய்கை முகாமைத்துவம்



உலர் காலம் நிலவுகின்றது எனில் கன்றை நட்டு 6 மாதம் வரை 3 தினங்களுக்கு ஒரு முறை 10 லீற்றர் நீர் வழங்கவும். 6 மாதங்களின் பின் வாரத்திற்கு ஒரு தடவை 20 லீற்றர் வழங்கவும்.

நான்கு மாதங்களுக்கு ஒரு தடவை திணைக்களத்தினால் சிபாரிசு செய்யப்பட்ட பசளைக் கலவையை பிரயோகிக்கவும். ஆறு மாதங்களுக்கு ஒரு தடவையேனும் தேவையானவாறு சேதனப் பசளை, மரத்தைச் சுற்றி தண்டிற்கு படாதவாறு பிரயோகிக்கவும் கோழியெரு சேர்ப்பதை தவிர்க்கவும்.

கன்றானது 2 - 3 அடி வளர்ச்சி அடைந்ததும் 1 - 1/2 அடி உயரத்தில் மரத்தின் முளையரும்பினை வெட்டி அகற்றுதல்.

மூன்று கிளைகள் முப்பக்கமும் பரவி காணப்படுமாறு ஏனைய கிளைகளை வெட்டி அகற்றுதல்.

இக் கிளை மூன்றிலும் நன்கு முதிர்ந்த இலைகள் கடும் பச்சை நிறமாக மாறிய பின் 1 - 11/2 அடி தொலைவில் கிளையின் முனையை வெட்டி அகற்றல்.

செய்கையின் ஆரம்பத்தில் இரசாயன பங்கசு நாசினி, பீடை நாசினி ஆகிய பயன்படுத்தல் அவசியமில்லை மெழுகு கொண்ட செதிற் பூச்சி தாக்கம் தொடர்பாக விடே கவனம் செலுத்தவும்.

ர.ரஜீவன் - விவசாய பட்டதாரி

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

இக் கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப் பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில் மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.



அங்கம் 07

- செல்லத்துரை ரவீந்திரன் -

**30. மிக அண்மையில் கனடாவின் ஒன் ரோறியா (Ontario) மாகாணத்தின் நாடாளுமன்றம் தமிழரின் இனப் படுகொலை பற்றி ஒரு சட்டம் நிறைவேற்றியதே. அது அடிப்படையாகாதா?**

முன்கூறியபடி, இவை அபிப்பிராயங்களே ஒழிய, யாரையும் கட்டுப் படுத்துவன அல்ல. ஒன்ரோறியா ஒரு மாகாண அரசு. அது கனடிய அரசாங்கம் ஆகாது. அது கனடிய அரசாங்கத்தால் நிறைவேற்றப்பட்டாலும், அது யாரையும் கட்டுப் படுத்தாது. அவை அபிப்பிராயங்கள், ஆதரவு தருவன. இதன் முன்னோடியாக அந்த மாகாணத்தின் மார்க்கம் (Markam) என்ற பிரதேச சபையில் இப்படியான தீர்மானம் ஒன்று நிறைவேறியது.

அவை மாத்திரமல்ல, ஜெயலலிதாவின் ஆட்சியில் இனப்படுகொலை தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டு, இந்திய அரசாங்கத்திற்கும் சர்வதேசத்துக்கும் அனுப்பப்பட்டது.

அதேபோல் 10 பெப்ரவரி 2015 இல் தமிழ் மக்களது வடமாகாண சபை இனப்படுகொலை பற்றிய தீர்மானம் ஒன்றை நிறைவேற்றி சர்வதேச சமூகத்துக்கு அனுப்பிவைத்தது. இவையெல்லாம் ஆதரவானவையே ஒழிய, சர்வதேசத்தின் நடவடிக்கையை கட்டுப்படுத்தவோ நிச்சயப்படுத்தவோ மாட்டா.

வடமாகாண சபை இனப்படுகொலை பற்றிய தீர்மானத்தை நிறைவேற்றிய சில மாதங்களின் பின் அப்பொழுது அதன் தலைவராக இருந்த நீதியரசர் விக்னேஸ்வரனை நேரடியாக சந்தித்து அளவளாவினேன். இப்படியான ஒரு தீர்மானத்தை உடனே நிறைவேற்ற வேண்டிய அவசியத்தையும் இதனை வடமாகாணசபை இதற்காக ஏற்படுத்திய கட்டமைப்பின் அனுசரணையுடன் காத்திரமானதாக நிறைவேற்றி இருக்கலாம் என்ற ஆதங்கத்தையும் வெளிப்படுத்தினேன். அவர் அதற்குத் தாம் எந்தவிதமான முன் அரசியல் அனுபவமும் இல்லாமல் இந்தப் பதவிக்கு அழைத்து வரப்பட்டவன், இங்கு வந்தபின் பல அரசியல் சில்லெடுப்புக்களைப் பார்த்தேன், அதிலிருந்து இப்படியான ஒரு தீர்மானம் உடனடியாக நிறைவேற்றப்படவேண்டும் என்ற கெடுபிடி இருந்தது. இந்த நிலைமைகளில் அதை நிறைவேற்றினோம். நான் அதனை மாகாணசபையின் அங்கத்தினர்களிடையே இன,மத பிரிவில்லாமல் ஏகமனதாக நிறைவேற்று வதற்கு உதவினேன் என்றார். அப்பொழுது இல்லாத அரசியல் தற்பொழுது இந்த தீர்மானத்தை ஒட்டி எழுப்பப்படுகிறது. அதை வேறு ஒரு கேள்வியில் பார்ப்போம்.

இப்படியான தீர்மானங்கள் நிறைவேற்றப்படுபவை, சர்வதேச ரீதியில் எமது இனப்படுகொலையை அவர்களின் பார்வையில் வைத்திருக்க உதவும்.

இந்த வருடம்தான் 100 வருடங்களின் பின் ஆர்மீனியா(Armenia)வில் துருக்கி ஒட்டோமன் (Ottoman Empire) காலத்தில் செய்தது இனப்படுகொலை என அமெரிக்கா அங்கீகரித்துள்ளது.

தமிழர்கள், அப்படியான அங்கீகாரங்களுக்கு அந்த மண்ணில் இனம் நிலை குலைந்தபின், அழிந்த பின், தேடாமல் அதன் இருப்பை தக்க வைப்பதற்கு ஆக்கப் பூர்வமான வழிகளைத் தேட வேண்டும்.

**31. இனப்படுகொலை நினைவு நாள் மீண்டும் 13 ஆவது வருடமாக 18 ஆம் திகதி வந்து விட்டது. பல சர்வதேச Zoom கூட்டங்கள், அரங்குகள் அதன் நினைவு கூரலுக்காக அறிவிக்கப்பட்டுள்ளன. இவற்றில் பயன் உண்டா?**

இவற்றின் பயன்கள் இறந்தவர்களையும் நடந்த அட்டூழியங்களையும் நினைவு கூர்ந்து, நாம் திடசங்கற்பம் கொள்வதற்கும் உறுதி பூணுவதற்குமான வழிவாய்க்கால்.

இவை முன்கூறியபடி சர்வதேசத்தின் கண்களிலிருப்பதற்காக நடத்தப்படவேண்டும். ஆனால் வருடா வருடம் இதில் சிலர் கூடி நினைவு கூர்ந்து விட்டு, சொன்னோம், பேசினோம் என்றுவிட்டு கலைவதில் பிரயோசனமில்லை.

அதனைத் தொடர்ந்த ஆணித்தரமான ஆக்கங்கள் வேண்டும். எவ்வளவோ பேச்சுக்களும் அறிக்கைகளும் வருகின்றன. சிலர் இந்த வகையில் தன்னிச்சையாகத் தீர்மானங்களைத் தாங்களே நிறைவேற்றி வெளியிடுகிறார்கள். அவை வால் நட்சத்திரம் போன்று சிலகால ஒளியைத் தந்துவிட்டு மறைந்து விடுகின்றன. நாங்கள் திக்குத் தெரியாத கடலில் எதுவித, திசைநோக்க உதவக்கூடிய கருவிகளும் இல்லாமல் தத்தளிக்கும் படகு போலிருக்கிறோம். இந்த வால் நட்சத்திரங்களின் திக்கை மாத்திரம் நம்பாமல், அனுபவமிக்க மாலுமி போல, நன்கு பழக்கமான நட்சத்திரங்களையோ, விடிவெள்ளிகளையோ நம்பிக் கரை சேர வேண்டும்.

அரசியல்வாதிகள், பத்திரிகைக்காரர், மேடைப் பேச்சாளர்கள் இனப்படுகொலைகள் பற்றி மக்களை ஈர்ப்பதற்கு பேசலாம். எழுதலாம். ஆனால் அவையெல்லாம் சட்ட வியாக்கியானத்திற்கு அமைவாக இருக்கத் தேவையில்லை. அவை விடுக்கும் கருத்துக்கள் பாதகம் தராத விதத்தில் கவனம் வேண்டும்.

**32. இன்னும் என்னதான் நடக்க வேண்டும் எமக்கு, நடப்பது இனப்படுகொலைதான் என சர்வதேசம் ஒத்துகொள்வதற்கு?**

ஓர் இனப் படுகொலையின் குறியீடுகளில் பல கூறுகள் அல்லது அங்கங்கள் நடந்து ஒப்பேறியுள்ளன என்று சுட்டிக் காட்டினேன்.

70 வருடங்களின் பின் நாடு எங்கே போகின்றது என்று மங்கள சமரவீர பேசியவற்றையும், தற்போதைக்கு கோட்டாபயவின் நிலைப்பாட்டை தினேஷ் குணவர்த்தன அறிவித்தமையையும் சுட்டிக் காட்டினேன்.

எப்படியும், தமிழர்களை அடித்தாவது அடக்குவதாகவே, அரசு உன்மத்தம் கொண்டுள்ளது. இவற்றின் வெளிப்பாடே, ஒரு வழியில் நீதிமன்றம் மூலம் தடை உத்தரவு பெறுவது. இதனை உலகுக்கு தாம் சட்ட நடவடிக்கைகளுக்கு அமைவாக செய்கிறோம் என்று பிரச்சாரப்படுத்தப்படுகிறது. அதற்கு தமிழர்கள் நீதி மன்றங்களிலும் பிரசன்னமாக வேண்டியிருக்கின்றது. பிரசாரங்களுக்கும் முகம் கொடுக்க வேண்டும்.

அதேசமயம் உன்மத்தமும் கட்டவிழ்க்கப்படுகிறது. முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி இரவோடிரவாக உடைக்கப்படுகிறது. தமிழர்களின் உணர்வுகள் கொச்சைப்படுத்தப்படுகின்றன. அரசாங்க மட்டத்தில் அதனை பற்றி எந்த ஆதங்கமும் இல்லை.

சிங்கள எதிர்க்கட்சிகள் உட்பட சிங்கள ஊடகங்கள் அதைப்பற்றிப் பேசவில்லை. எல்லோருமே இருட்டடிப்பு செய்கிறார்கள். ஆக, சிங்களத் தேசியப் பேரினவாதம் மிக மிகக் கவனமாகவே காய்களை நகர்த்துகின்றது.

எம்மைக் கொத்துக் கொத்தாக அழிப்பது (கொல்வதுதான்) மிச்சம். அதனைச் செய்தால் அல்லது முனைந்தால், சர்வதேசம் திரும்பி பார்க்கும். அதில் தற்சமயம் ஐ.நா. மனித உரிமைகள் கொண்டுள்ள நிலைப்பாட்டில் அங்கத்துவ நாடுகள் நடவடிக்கை எடுக்கலாம்.

ஒன்றைத் தமிழர்கள் வடிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். எங்கள் கைகளே எங்களது கண்களை குத்தப் பாவிக்கப்படுகிறது.

1977 ஆண்டு கலவரங்கள் நடந்தபோது சர்வதேசம், இப்படியும் மக்கள் நடப்பார்களா என்று வெறுப்புக் காட்டியது. அதனைத் தொடர்ந்து ஜனாதிபதி ஜே. ஆர். தன்னையும் தனது மக்களையும் தார்மிஷ்டர்களாகக் காட்ட முனைந்தார். ஆனாலும் அவரது மக்கள் 1983ஆம் ஆண்டு நடத்திய உன்மத்தங்கள், களேபரங்கள் என்பவை, சிங்கள மக்களைத் திட்டமிட்டு செயற்பட்ட நயவஞ்சகர்கள் என்றும் காட்டுமிராண்டிகள் என்றும் சர்வதேச சமூகம் அபிப்பிராயங்களை வெளியிட வைத்தன.

1983ஆம் ஆண்டு கலவரம் போல இன்னுமொன்றை இலங்கையின் எல்லாப் பகுதிகளிலும் தமிழருக்கு எதிராக நடத்தக்கூடாது என்ற உள்ளுணர்வு சிங்களத் தலைவர்களுக்கு வந்தது.



நன்கு கற்றறிந்த கனவான், லலித் அத்துலத்முதலி, பாதுகாப்பு மந்திரியாக பல செயல்களை ஆரம்பித்தார். நாடாளுமன்றத்தில் கூட பரப்புரை செய்தார்.

"எமது மக்கள் எங்களிடையே வாழும் சகோதரர்களைத் துன்புறுத்தல் செய்யக் கூடாது" – என்றார்.

"வெலிக்கடையில் 83ஆம் ஆண்டு கலவரத்தில் நடந்தவை மகாபாதகம். இவற்றால் நாம் ஓர் இனமாகப் பழிக்கப்படுகிறோம். அதனால் நாம் 83ஆம் ஆண்டு கலவரம் போன்று ஒன்றை நடக்க விடக்கூடாது. யார் கிளர்ச்சிக் காரர்களோ அவர்களைத் தான் அடக்க வேண்டும், தமிழ் மக்கள் மிக புத்திசாலிகள். அவர்களோடு புத்தசாதுரியமாக எங்களால் எதுவும் சாதித்து விடமுடியாது. ஆனால், தமிழர்களின் பலவீனம் அவர்களிடமே உள்ள சுயநலமும் அதனால் வரும் ஒற்றுமையீனமும். அதனைத்தான் நாங்கள் பாவித்து அவர்களை முறியடிக்க வேண்டும்." – என்றார்.

அதற்காக அவர் சில தமிழர்களையே பாவித்து சென்னையில் புலிகளின் ஆலோசகர் பாலசிங்கத்தின் வீட்டுக்கு குண்டு வைத்தார்.

தமிழர்களே அதனைச் செய்தனர் என்று பிரச்சாரம் மேற்கொண்டார். இயக்கங்கிடையே உளவாளிகள் மூலமும் அவர்களுக்கு ஆதரவும் தந்து ஒன்றை ஒன்று முரண்பட வழிகோலினார். உமாமகேஸ்வரன், மகா சங்கத்தினரின் காலில் விழுந்து புலிகள் தான் பிரச்சினைக்குக் காரணர்கள் என்றார். அதனைப் பின்பற்றி பின்வந்தோர் டக்ளஸை வளர்த்தனர். புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ். என்று எல்லா விடுதலைப் போராளிகளும் ஏதோ ஒரு விதத்தில் பிரிவினைகளால் அரசாங்கத்துக்கு ஆதரவாகச் செயற்பட்டனர்.

பின்நாளில் கருணா பிரிந்தார். பிள்ளையானோடு பிறகு அவர்களும் பிரிந்தார்கள்.

ஆனாலும் 1983ஆம் ஆண்டுக் கலவரம் போல ஒன்றை நடத்த சிங்கள அரசுகள் விடவில்லை. எம்மை பிரித்து காரியம் ஆற்றுவதிலேயே குறியாய் இருந்தார்கள். இவையெல்லாம் இனப்படுகொலை என்பதை நிரூபித்து நாம் தாண்டிப் போக வேண்டிய வழிப்படிகள். ஏறுவதற்கல்ல, எம்மை இறக்குவதற்கு.

(வளரும்....)

காலைக்கதிர் Kalaikkathir

# 10 மாவட்டங்களைச் சேர்ந்த 70 கிராம சேவகர் பிரிவுகள் உடன் அமுலுக்கு வரும் வகையில் தனிமைப்படுத்தப்பட்டன

இலங்கையில் 10 மாவட்டங்களைச் சேர்ந்த 70 கிராம சேவகர் பிரிவுகள் உடன் அமுலுக்கு வரும் வகையில் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

இந்த விடயம் தொடர்பாக இராணுவத் தளபதி சவேந்திர சில்வா மேலும் கூறியுள்ளவை வருமாறு –

கொரோனா அச்சுறுத்தல் காரணமாக திருகோணமலை – கிண்ணியா பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பெரியகிண்ணியா, அல்தர் நகர், குட்டிக்கராச்சி, ரஹுமானியான் நகர், பெரியாத்துமனை, கிண்ணியா, மலிந்தூர், மண்வெளி, சின்ன கிண்ணியா, குறிஞ்சான்கேணி, கட்டையாறு, முனைச்சேனை ஆகிய கிராம சேவகர் பிரிவுகள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

அதேபோன்று குருநாகல், கிரிவுள்ள பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட நாரங்கொட வடக்கு, ஹமன்கல்ல, நாரங்கொட தெற்கு, மல்கமுவ, பட்டபொதெல்ல, நாரங்கமுவ மற்றும் தொடங்பொத்த ஆகிய கிராம சேவகர் பிரிவுகள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

மேலும் மாத்தளை யட்டவத்தை கிராம சேவகர் பிரிவுக்கு உட்பட்ட அலவத்தை கிராமம் மற்றும் வல்பொல தெற்கு கிராம சேவகர் பிரிவின் வெடிகந்த கிராமம் என்பன தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு – கிரான்குளம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட வேலாப்பொடி வீதி, நெசவு நிலைய வீதி. கண்ணகி அம்மன் ஆலயவீதி மற்றும் கிரான்குளம் கிராமசேவகர் பிரிவு பி பிரிவிலுள்ள விதானையார் வீதி, லேக்றோட் வீதி, அப்புகாமி வீதிகள் ஆகிய கிராம சேவகர் பிரிவுகள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

இதேவேளை பொகவந்தலாவ பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பொகவானை, கெர்கசோல்ட், கொட்டியாக்கலை, லொய்னொன், பொகவந்தலாவ ஆகிய கிராம சேவகர் பிரிவுகள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

இதேபோன்று இரத்தினப்புரி – கஹவத்தை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட நுகவெல மேற்கு, உடஹவுபே, நுகவெல கிழக்கு, எந்தன,மடலகம ஆகிய கிராம சேவகர் பிரிவுகள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

இறக்குவாணை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பனாப்பிட்ட வடக்கு, பனாப்பிட்ட தெற்கு, கெப்பெல, மியனவிட மேற்கு ஆகிய கிராம சேவகர் பிரிவுகள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

இதனிடையே களுத்துறை – இங்கிரிய பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட றைகம் தோட்டம் கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட றைகம் தோட்டம் கீழ் பிரிவு மற்றும் மஹா இங்கிரிய கிராம சேவகர் பிரிவிற்குட்பட்ட றைகம்புர, றைகம் ஜனபதய ஆகிய பகுதிகள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

அம்பாறை – பதியதலாவ பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கேஹேல்வுல்ல கிராம சேவகர் பிரிவின் கடுபஹர கிராமம் தனிமைப்படுத்தப்பட்டுள்ளது.

அதேபோன்று காலி – எல்பிட்டிய பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட படுவத்ஹேன, வல்லம்பகல கிராம சேவர் பிரிவுகள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

மேலும் நுவரெலியா – நோர்வூட் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட இன்ஜஸ்றீ, வென்ஜர், டில்லரி ஆகிய கிராம சேவகர் பிரிவுகள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.



அகலவத்தை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கித்துல்கொட கிராம சேவகர் பிரிவு மற்றும் கம்பஹா மாவட்டத்தின் பியகம பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பியகமவடக்கு கிராமசேவகர் பிரிவுதனிமைப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும் ஹற்றன் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட என்பீல்ட் கிராம சேவகர் பிரிவும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பொருள்களின் விலையை அதிகரிக்க இடமில்லை



பொது மக்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்களை எந்த விதமான தட்டுப்பாடும் இன்றி விநியோகிக்கும் பொறிமுறைக்கு அனைத்துத் தரப்பினரினதும் ஒத்துழைப்பு கிடைக்கின்றது என வர்த்தகத்துறை அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

நாடு முழுவதும் உள்ள மொத்த விற்பனை வர்த்தகர்களுக்கு புறக்கோட்டை மொத்த வர்த்தக சந்தைக்கு வருவதற்கும் பொது மக்களுக்கு விநியோகிப்பதற்குத் தேவையான பொருள்களை பெற்றுக்கொள்வதற்கும் தேவையான அனுமதிப் பத்திரத்தை வழங்கி பொருள்களை விநியோகிக்கும் பொறிமுறையை தடையின்றி செயற்படுத்துவதற்கும் புறக்கோட்டை மொத்த வர்த்தக சந்தை மற்றும் மாவட்ட செயலகங்கள் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன.

இதற்கமைவாக நேற்று மொத்த விற்பனை நடவடிக்கையில் ஈடுபடும் வர்த்தகர்கள் பெரும் எண்ணிக்கையில் வந்திருந்தனர் என அமைச்சர் இதன் போது குறிப்பிட்டார்.

மொத்த விற்பனைக்காக புறக்கோட்டையின் 4 ஆம், 5 ஆம் குறுக்குத் தெருக்கள் இன்று திறக்கப்பட்ட நிலையில் அதனை கண்காணிக்கச் சென்ற வர்த்தகத்துறை அமைச்சர் பந்துல குணவர்த்தன இதனைத் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான இக்கட்டான நிலையில் பொருள்களின் விலையை அதிகரிக்க இடமளிக்கப்பட மாட்டாது என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

வர்த்தக சங்கத்துடன் ஏற்படுத்திக் கொண்ட ஒப்பந்தத்துக்கு அமைய தற்போதைய பொருள்களின் விலை அமுலில் இருக்கும் எனவும் வர்த்தகத் துறை அமைச்சர் கூறினார்.

## கொவிட் தடுப்பூசி வழங்கல் திட்டத்தில் முன்னேற்றங்கள்

நாட்டில் நேற்றுமுன்தினம் (ஞாயிற்றுக்கிழமை) மாத்திரம் 26 ஆயிரத்து 697 பேருக்கு சீனாவின் சினோ போர்ம் தடுப்பூசியின் முதலாவது டோஸ் போடப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு அறிக்கை ஒன்றை வெளியிட்டு இதனைக் குறிப்பிட்டுள்ளது.

அதன்படி, நாட்டில் இதுவரை 3 லட்சத்து 75 ஆயிரத்து 316 பேருக்கு சினோபோர்ம் தடுப்பூசி போடப்பட்டுள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, நேற்றைய தினம் 1,612 பேருக்கு கொவிசீல்ட் தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் போடப்பட்டுள்ளது.

இதற்கமைய, இதுவரை 2 லட்சத்து 67 ஆயிரத்து 77 பேருக்கு கொவிசீல்ட் தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் போடப்பட்டுள்ளது.

இதேவேளை, 14 ஆயிரத்து 699 பேருக்கு இதுவரை ஸ்புட்னிக் வி தடுப்பூசி போடப்பட்டுள்ளதாக தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

## இளம் மனைவியை அடித்து கொலை செய்தார் கணவன்

கொழும்பு, மஹரகம பிரதேசத்தில் கணவர் ஒருவர் மனைவியை அடித்து கொலை செய்த சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது. குடும்ப பிரச்சினை நீண்ட தூரம் சென்றமையால் இரும்பு கம்பியால் கணவன், மனைவியை அடித்து கொலை செய்துள்ளார்.

மஹரகம, பமுனுவ வீதி பிரதேசத்தில் நேற்று இந்த கொலைச் சம்பவம் இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு கொலை செய்யப்பட்டவர் 33 வயதுடைய பெண் ஒருவர் என பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். சந்தேக நபரான கணவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். உயிரிழந்த பெண்ணின் சடலம் தற்போது வரையில் களுபோவில வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளனஎனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## 'உயிர் குமிழி' முறை மூலம் சுற்றுலாப் பயணிகள் வரலாமாம்

இலங்கைக்கு வருகை தரும் அல்லது வர திட்டமிட்டிருக்கும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் உயிர் குமிழி முறை மூலம் வர முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் தம்மிக்க விஜேசிங்க இதனைத் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், இவ்வாறு வருகை தருபவர்கள் சுகாதார வழிகாட்டுதல்களைக் கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் சுகாதார சேவை பணிப்பாளர் நாயகம் மற்றும் பொலிஸ்மா அதிபருக்கு அறிவித்துள்ளேன் என அவர் மேலும் தெரிவித்தார்.

## மாரவில ஆதார வைத்தியசாலையில் 8 வைத்தியர்களுக்குக் கொரோனா

மாரவில ஆதார வைத்தியசாலையில் 8 வைத்தியர்களுக்கு கொரோனா வைரஸ் (கொவிட் 19) தொற்று ஏற்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதுவரை அந்த வைத்தியசாலையில் 31 பேருக்கு தொற்று ஏற்பட்டுள்ளன என புத்தளம் மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் தினுஷா பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

தற்போது அந்த வைத்தியசாலையின் 4 விடுதிகள் மூடப்பட்டுள்ளன எனவும் விரைவில் அவற்றைத் திறக்க எதிர்பார்க்கிறார் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அவசர சிகிச்சை பிரிவுகள் இரண்டும், தீவிர சிகிச்சை பிரிவு மற்றும் கர்ப்பிணி பெண்களுக்கு சிகிச்சையளிக்கும் இரண்டு விடுதிகளும் மூடப்பட்டுள்ளன.

அந்த வைத்தியசாலையின் அவசர சிகிச்சை பிரிவில் கடமையாற்றிய தாதியர்கள் இருவருக்கு தொற்று ஏற்பட்டது என கடந்த வாரம் உறுதிப்படுத்தப்பட்டது.

இதனை அடுத்து மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனைக்கு அமைய கடந்த ஞாயிற்றுக்கிழமை 5 வைத்தியர்கள் உட்பட 20 பேருக்குத் தொற்று உறுதியானது.

எனினும் ஞாயிறு மாலை வேளையில் அந்த எண்ணிக்கை 29 ஆக அதிகரித்தது.

நேற்று காலையாகும் போது அந்த வைத்தியசாலையில் தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை 31 ஆக உயர்வடைந்துள்ளது.

இவ்வாறு தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டவர்களில் 8 வைத்தியர்களும் அடங்குகின்றனர்.

இதனால் அந்த வைத்தியசாலைக்கு அழைத்துவரப்படும் நோயாளர்களை சிலாபம் பொது வைத்தியசாலைக்கு மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஹற்றன் பிரதான தபால் நிலையம் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த தபாலகத்தில் பணி புரிந்த 2 ஊழியர்களுக்கு கொவிட் தொற்று ஏற்பட்டமையையடுத்து இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அந்த 2 ஊழியர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கும் கொவிட் தொற்று உறுதியானதைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று ஹற்றன் – டிக்கோயா நகர சபையின் பொதுச் சுகாதார அதிகாரி ராமய்யா பாலகிருஷ்ணன் தெரிவித்துள்ளார். சுய தனிமைப்படுத்தப்பட்டுள்ள 17 ஹற்றன் தபால் ஊழியர்களை ரெபிட் என்டிஜன் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுள்ளனர் எனவும் அவர் கூறினார். இதனால் நேற்று வழங்கப்பட இருந்த முதியோர் கொடுப்பனவு வழங்காமல் இருக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# வலி வடக்கில் படை ஆக்கிரமிப்பு பிரதேசத்தில் காணிகளை ஊடறுத்து புதிய வீதிகள் அமைப்பு




(ந.லோகதயாளன்)

வலி. வடக்கு பகுதியில் இராணுவத்தினர் ஆக்கிரமித்து நிலை கொண்டிருக்கும் பிரதேசத்தில் பாதுகாப்பு வேலிகளுக்கு உட்புறமாக புதிதாக வீதிகள் அமைக்கப்படுகின்றமை அப்பிரதேசக் காணிகளின் உரிமையாளர்களுக்கு அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

வலி. வடக்கில் கட்டுவன், வசாவிளான், குரும்பசிட்டி ஆகிய முன்னரங்கப் பகுதிகளில் படையினர் ஆக்கிரமித்து நிலைகொண்டிருக்கும் பிரதேசத்தில் தடுப்பு வேலிகளை அண்டி படையினர் போக்குவரத்துச் செய்யும் குறுகிய பாதைகள் நீண்டகாலமாக காணப்பட்டன. அந்தப் பாதைகள் கூட படையினர் தமது நிலைகளை அவ்வப்போது முன்பின்னாக நகர்த்தி மாற்றும்போது மாறின.

இருந்தபோதும் அண்மைய நாள்களாக இத்தகைய பதைகளின அருகே இருந்து பற்றைகள் துப்பரவு செய்யப்படுவது மட்டுமன்றி மேலதிக மண் கொட்டப்பட்டு அவை பெரு வீதியாக அகலிக்கப்படுகின்றன. இவ்வாறு அமைக்கப்படும் வீதிகளில் கற்கள் பரவப்பட்டு, அவை தார் வீதிகளாக நிரந்தரமாக அமைக்கப்படுமா என்ற அச்சம் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த வகை வீதிகள் பலாலி வீதிக்கு கிழக்கே உள்ள 647 ஏக்கரின் சுற்று வட்டத்திற்கும் நீண்டு அப் பகுதிகளிலும் வீதி அமைப்பு பணிகள் இடம் பெறுகின்றன.

2020ஆம் ஆண்டிற்கு முன்னர் இருந்த அரசில் வலி . வடக்குப் பகுதியிலே பலாலி வீதிக்கு கிழக்கே உள்ள 647 ஏக்கர் நிலப் பரப்பினையும் நில உரிமையாளர்களிடம் மீளக் கையளிக்க இணங்கப்பட்டிருந்தது. இப்போதைய நிலையில் இந்தக் காணிகளும் விடுவிக்கப்படுமா என்ற ஐயம் வலுப்பெற்றுள்ளது.

## 16 நாள்களில் 284 பேர் கொரோனாவால் பலி

### 4 கர்ப்பிணிப் பெண்களும் சாவு



இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி மே முத லாம் திகதி முதல் 16ஆம் திகதி வரை நான்கு கர்ப்பிணிப் பெண்கள் உட்பட 284 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதன்படி மே முதலாம் திகதி 9 பேரும், 2 ஆம் திகதி 9 பேரும், 3ஆம் திகதி 13 பேரும், 4ஆம் திகதி 11 பேரும், 5 ஆம் திகதி 14 பேரும், 6ஆம் திகதி 11 பேரும், 7 ஆம் திகதி 19பேரும், 8 ஆம் திகதி 22 பேரும், 9ஆம் திகதி 15 பேரும், 10 ஆம் திகதி 26 பேரும், 11ஆம் திகதி 23 பேரும் கொரோனாவால் பலியாகியுள்ளனர்.

அத்துடன், மே 12ஆம் திகதி 18 பேரும், 13ஆம் திகதி 24 பேரும், 14 ஆம் திகதி 29 பேரும், 15 ஆம் திகதி 20 பேரும், 16ஆம் திகதி 21 பேரும் இவ்வாறு கொரோனாவால் பலியாகியுள்ளனர்.

இதேவேளை, நாட்டில் கொரோனாவால் நேற்று (16) இரவு வரை 962 பேர் மொத்தமாக உயிரிழந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## தவிர்க்க முடியாத தேவையின்றி வீட்டிலிருந்து வெளியேறாதீர்கள்!

### மக்களிடம் மருத்துவ அதிகாரிகள் சங்கம் கோரிக்கை

தவிர்க்க முடியாத தேவைகளுக்காக அன்றி, பொதுமக்கள் வீட்டிலிருந்து வெளியேற வேண்டாம் என்று அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் கேட்டுக்கொண் டுள்ளது.

வெசாக் பண்டிகை முடியும் வரை பொதுமக்கள் பயணக் கட்டுப்பாடுகளைப் பேண வேண்டும் என்றும் அரச வைத்திய அதிகாரி கள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் வைத்தியர் ஷெனால் பெர்னாண்டோ இந்தக் கோரிக்கையை முன் வைத்துள்ளார்.

பொதுமக்களின் ஆதரவு கொரோனா பரவல் மற்றும் உயிரிழப்புகளைத் தவிர்த்துக்கொள்ள உதவியாக அமையும் என்றும் அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

கடந்த மூன்று நாள்களில் பொதுமக்கள் வீட்டிலிருந்து ஒத்துழைத்ததைப் போன்று, அடுத்த 10 நாள்களும் பயணங் களைக் குறைத்துக்கொள்ள வேண்டும் என்றும் வைத்தியர் ஷெனால் பெர்னாண்டோ மேலும் தெரிவித்துள்ளார்.

## மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் பணி மே 31 வரை இடைநிறுத்தம்

(ந.லோகதயாளன்)

வடக்கு மாகாண மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் பணிகள் எதிர்வரும் 31ஆம் திகதி வரை இடம்பெறமாட்டாது என நேற்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து வடக்கின் 34 பிரதேச செயலகங்களிலும் இயங்கும் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் பிரிவுகள் 31ஆம் திகதி வரையில் இழுத்து மூடப்படுகின்றன.

நாட்டின் ஏனைய மாகாணங்களின் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் அலுவலகங்கள் ஏற்கனவே மூடப்பட்டுள்ள நிலையில் வடக்கு மாகாண மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள அலுவலகங்கள் தொடர்பில் ஆளுநரின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்ட நிலையில் வடக்கின் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் அலுவலகங்களையும் எதிர்வரும் 31ஆம் திகதி வரையில் மூடுவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.

## முல்லைத்தீவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஊக்குவிக்காமலும் நடத்தலாம் என முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றம் நேற்று தெளிவான அறிவுறுத்தலை வழங்கியது.

ஆனாலும் முள்ளிவாய்க்காலை உள்ளடக்கிய முள்ளியவளை பொலிஸ் பிரிவு உட்பட முல்லைத்தீவின் மூன்று பொலிஸ் பிரிவுகள் அரசினால் முழுமையாக முடக்கப்பட்டிருக்கின்றமையால் இன்று முள்ளிவாய்க்காலில் நினைவேந்தலை நடத்த முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

முள்ளிவாய்க்காலில் இன்று கொரோனாத் தடுப்பு சுகாதார விதிமுறைகளைக் கடைப்பிடித்து இறுதிப் போரில் இறந்த உறவு களுக்கு மக்கள் அஞ்சலி செலுத்த முடியும் என்று முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றம் நேற்றுத் தெளிவுபடுத்தியது.

முள்ளிவாய்க்கால் மண்ணில் நினைவேந்தல் நிகழ்வை நடத்துவது தொடர்பில் முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த உத்தரவை ஒட்டி நேற்று நகர்த்தல் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது. அதனடிப்படையில் நேற்று இந்த விடயம் நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டது. அப்போது நீதிவான் ரி.சரவணராஜா தமது முன்னைய உத்தரவைத் தெளிவுபடுத்தினார்.

கொரோனாத் தொற்றுத் தடுப்பு சுகாதார விதிமுறைகளைக் கடைப்பிடித்து, பயங்கரவாதத்தை ஊக்குவிக்காமல் அஞ்சலி நிகழ்வுகளை நடத்தத் தடை ஏதும் விதிக்கப்படவில்லை என்று நீதிமன்றம் சுட்டிக்காட்டியது.

## புதுக்குடியிருப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. அவர்களில் 117 பேருக்குத் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 66 பேரும், யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 33 பேரும், கிளிநொச்சி மாவட்டத்தில் 7 பேரும், வவுனியா மாவட்டத்தில் 6 பேரும், மன்னார் மாவட்டத்தில் 5 பேரும் என 117 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு ஆடைத் தொழிற்சாலையில் 61 பேரும், முல்லைத் தீவு வைத்தியசாலையில் 2 பேரும், புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் 3 பேரும் என 66 பேருக்குத் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

கிளிநொச்சி வைத்தியசாலையில் 5 பேருக்குத் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. தருமபுரம் வைத்தியசாலையில் 2 பேருக்குத் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

வவுனியா வைத்தியசாலையில் 5 பேருக்கும், செட்டிகுளம் வைத்தியசாலையில் ஒருவருக்கும் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

மன்னார் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட 5 பேருக்குத் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை தனிமைப்படுத்தல் விடுதியில் சேர்க்கப்பட்ட 7 பேருக்குத் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

பருத்தித்துறை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட ஒருவருக்கும், சாவகச்சேரி வைத்தியசாலையில் மூவருக்கும், சங்கானை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட ஒருவருக்கும், தெல்லிப்பழை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட ஒருவருக்கும் தொற்றுள்ளமை கண்டறிய ப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாநகர சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 9 பேருக்கும், சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 8 பேருக்கும் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

சண்டிலிப்பாய், நல்லூர் மற்றும் உடுவில் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுகளில் தலா ஒருவருக்குத் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

இதேவேளை, புதுக்குடியிருப்பு ஆடைத்தொழிற்சாலையின் பணியாளர்கள் 960 பேரிடம் நேற்று முன்னெடுக்கப்பட்ட உடனடி அன்டிஜன் பரிசோதனையில் 261 பேருக்குத் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது – என்றார்.

## மிகக் குறைந்த கட்டணத்தில் வரி விளம்பரங்கள்

உங்கள் நாளாந்த தேவைகளில் பொருள்கள், ஆதனங்கள், வாகனங்கள், வளர்ப்புப் பிராணிகளை வாங்க, விற்க மற்றும் வாடகைக்குப் பெறவும், மண மக்கள் தேவை போன்ற அத்தியாவசிய அறிவித்தல் களைப் பிரசுரிக்கவும் மிகக் குறைந்த கட்டணத்தில் 'காலைக்கதிர்' சேவையைப் பெற்றுக்கொள்ள **076 443 8619** என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

யாழ்ப்பாணத்தில் இருந்து தினசரி இருமுறை – அதிகாலையும் மாலையும் – உலகெங்கும் உள்ள பல்லாயிரம் தமிழ் வாசகர்களை தவறாது எட்டும் ஒரே நாளிதழ் ஊடாக குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்து அதிக பயனைப் பெற்றுக் கொள்ளுங்கள்.




# ரவிகரன், சிவாஜிலிங்கம் உள்ளிட்டோருக்கான வழக்கு கொரோனா காரணமாக ஒக்ரோபருக்கு ஒத்திவைப்பு

**(விஜயரத்தினம் சரவணன்)**

கடந்த 2018 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் முல்லைத்தீவு வட்டுவாகல் பகுதியில் மக்களுக்கு சொந்தமான 617 ஏக்கர் காணியை அபகரிக்கச் சென்ற நில அளவீட்டாளர்களுக்கு எதிர்ப்பு தெரிவித்து, கோட்டாபய கடற்படை முகாமிற்கு முன்பாக மக்கள் போராட்டத்தில் கலந்துகொண்டதற்காக முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர்களான துரைராசா ரவிகரன் மற்றும் எம்.கே.சிவாஜிலிங்கம் உள்ளிட்ட நால்வருக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கின் விசாரணை நேற்று (திங்கட்கிழமை) முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றால் தவணையிடப்பட்டிருந்தது.

இந்நிலையில் கொவிட் -19 அசாதாரண சூழ்நிலை காரணமாக முல்லைத்தீவு நீதிமன்றால் குறித்த வழக்கு விசாரணைகள் எடுத்துக்கொள்ளப்படாத நிலையில், எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 12ஆம் திகதிக்கு குறித்த வழக்கின் விசாரணைகள் திகதியிடப்பட்டுள்ளன.

இது தொடர்பில் மேலும் தெரியவருகையில் -

கடந்த 2018 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 22 ஆம் திகதி, முல்லைத்தீவு - வட்டுவாகல் பகுதியில், கோட்டாபய கடற்படை முகாமிற்கு முன்பாக இடம்பெற்ற காணி அபகரிப்பிற்கு எதிரான போராட்டத்தில் ஈடுபட்டதற்காக முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் து.ரவிகரன் 28.02.2018அன்று முல்லைத்தீவு பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டிருந்த நிலையில், பின்னர் பிணையில் விடுதலையாகியிருந்தார்.

இதேவேளை, வடமாகாணசபை முன்னாள் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் முன் பிணை கோரி, சட்டத்தரணி ஊடாக பிணையில் வெளிவந்தார்.

அதனைத்தொடர்ந்து இலங்கை தமிழரசுக்கட்சியின் இளைஞர் அணியைச் சேர்ந்த அன்ரனி ஜெகநாதன் பீற்றர் இளஞ்செழியன், முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் சம்மேளன நிர்வாக உறுப்பினர் அன்னலிங்கம் சண்முகலிங்கம் ஆகியோரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு பிணையில் விடுதலை செய்யப்பட்டிருந்தனர்.

இவ்வாறாக நால்வர் மீதும் தொடரப்பட்ட வழக்கின் விசாரணைகள் கடந்த மூன்று வருடங்களுக்கு மேலாக இடம்பெற்றுவரும் நிலையில், நேற்று (திங்கட்கிழமை) முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றில் இதுதொடர்பான வழக்குவிசாரணை தவணையிடப்பட்டிருந்தது.

நேற்று வழக்கு விசாரணைகளுக்காக நில அளவைத் திணைக்களத்தால் குற்றஞ்சாட்டப்பட்டோர் சார்பில், முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர்களான துரைராசா ரவிகரன் மற்றும் எம்.கே. சிவாஜிலிங்கம், அ.பீற்றர் இளஞ்செழியன், அ.சண்முகலிங்கம் ஆகிய நால்வரும் நீதிமன்றத்துக்கு வருகைதந்திருந்தனர்.

இந் நிலையில் நேற்றைய நாளுக்காக தவணையிடப்பட்டிருந்த குறித்த வழக்கின் விசாரணைகள் தற்போதைய கொவிட் -19 அசாதாரண நிலையினைக் கருத்தில் கொண்டு நேற்று எடுத்துக்கொள்ளப்படவில்லை என்பதுடன், எதிர்வரும் 12.10.2021 அன்றைய நாளுக்கு இந்த வழக்கின் விசாரணைகள் தவணை இடப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# அரசியல் பேதங்களுக்கு அப்பால் நாட்டை மீட்க ஒன்றிணையங்கள்

## ஆதிவாசி தலைவர் கோரிக்கை

கொழும்பு, மே 18

அரசியல் பேதங்களை புறந்தள்ளி நாடு எதிர்நோக்கியுள்ள நோய்த் தொற்றை கட்டுப்படுத்த ஆளும். எதிர்கட்சி உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றிணைய வேண்டிய காலம் உருவாகியுள்ளது என ஆதிவாசிகளின் தலைவர் ஊருவரிகே வண்ணில எத்தோ கோரிக்கை விடுத்துள்ளார்.

மொனராகலைப் பகுதியில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டியது அவசியம் எனவும் அவர் கூறினார்.

கட்சி, சமயம் மற்றும் அரசியல் பேதங்கள் உள்ளிட்டவைகளை மறந்து சகலரும் நாட்டுக்காக ஒன்றிணைந்து செயற்பட வேண்டியது அவசியம் எனவும் அவர் கூறியுள்ளார்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 18.05.2021 இல் வெளியிடப்பெற்றது.